Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 17 01-07-94 வெள்ளிக்கிழமை ஓசை 133

## நிர்வாகசேவை ஆட்சேர்ப்பு: வயது எல்லையை கூட்டுக

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான வயதெல்லையை 26இலிருந்து 32ஆக நீடிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக அமைச்சருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. போட்டிப் பரீட்சைக்கான வயதெல்லை 22க்கும் 26க்கும் இடைப்பட்டதென வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களில் ஒழுங்காக பரீட்சை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் உரிமைக்காகவே புலிகள் போராடுகின்றனர்!

## யாழ். ஆயர் பி. பி. ஸிக்கு தெரிவிப்பு

(லண்டன்)

**"நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருகின்றோம் என்பதல்ல; ஆனால் அவர்கள் எப்பொழுதுமே மக்களின் உரிமைக்காக குரல் எழுப்பி வருகின்றனர். எனவே நாங்கள் அவர்களுடன் இனங்காணப்படுவதாக இருக்கலாம்" என யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் பி. பி. ஸி. செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.**

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த பி.பி.ஸி செய்தியாளர் ஜோர்ச் ஆர்னிக்கு வழங்கிய பேட்டியின்போதே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

திருப்பலி ஆராதனை ஒன்றின் பின் ஆயரைச் சந்தித்த ஜோர்ச் ஆர்னி கத்தோலிக்க மத பீடம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குகின்றதா? எனக் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த ஆயர்,

நாங்கள் புலிகளுக்கு ஆதரவு தருகிறோம் என்பதல்ல. ஆனால் தமது சுதந்திரத்துக்காக போராடும் மக்களை ஆதரிக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் விமானப்படைமீது தாக்கு

### ஒருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

திருகோணமலை மாவட்டம் பன்மதவாச்சிக்கும் வேப்பங்குளத்திற்குமிடையே நேற்று முன்தினம் காலை 8.20 மணியளவில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இதேவேளை விமானப் படையினருக்கு உதவியாக பவள் சகிதம் புக்காரா விமானமும் உலங்குவானூர்தியும் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதலின் போது

- ★ ரி-81 ரக துப்பாக்கி - 01
- ★ மகசின் - 08
- ★ நடுத்தர ரவைகள் - 240
- ★ ஏ. கே. கோல்சர் - 01

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

கிழக்கு மாகாணத்திலுள்ள பன்னிவெவட்டிய என்னும் இடத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஓர் இராணுவ சிப்பாய் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## சித்தாண்டி மீது ஷெல் வீச்சு இரு சிறுமிகள் பலியாகினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் சித்தாண்டிப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது திடீரென நடாத்திய எறிகணைத் தாக்குதல்களினால் இரு சிறுமிகள் உடல் சிதறிப் பலியாகினர்.

ஏறாவூர் பொலிஸ் பகுதியில் உள்ள மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் இராணுவத்தினரே இவ் எறிகணைத் தாக்குதல்களை கடந்த செவ்வாய் மாலை மேற்கொண்டனர்.

எறிகணைகள் சித்தாண்டிப் பகுதியில் முத்துலிங்கம் என்பவரது வீட்டில் வீழ்ந்து வெடித்த போது முற்றத்தில் நின்று விளையாடிய இவரது பிள்ளைகளான கருணாநந்தி (வயது 5) ஜெயகாந்தினி (வயது 3) ஆகிய இரு சிறுமிகளும் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

## நால்வர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாக கிடைத்த தகவலை தொடர்ந்து சிறிலங்கா பொலிசாரும் இராணுவத்தினரும் கொட்டாஞ்சேனை பகுதியில் கூட்டாக நடத்திய

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூவர் விடுவிப்பு

(வடமராட்சி)

மாதகல், இளவாலைப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானபோது தடுத்து வைக்கப்பட்டவர்களில் மூன்று வயோதிபர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 400 மாணவர்கள் பல்கலைக்கு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் பெயர்களை அடுத்த மாத இறுதிக்குள் பதிவு செய்து முடிக்குமாறு பல்கலைக் கழகங்கள் கேட்கப்பட்டுள்ளன.

இப் பதிவு முடிந்ததும், மேலும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். குறைந்தது இன்னும் 400 பேர்களையாவது சேர்க்க, பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது 8000 பேர் வரை சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களின் அனுமதி முடிவுற்றதும், ஏற்படும் காலியிடங்களுக்கு இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## பிரேமா மகன் போட்டி

(கொழும்பு)

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மகன் சஜீத் பிரேமதாசா அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐ. தே. க. சார்பில் போட்டியிட இருப்பதாக கட்சியின் தலைமைக் காரியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## செயலாளர் பதவியிலிருந்து செல்லச்சாமி நீக்கம்

### புதிய செயலாளர் ஆறுமுகம் தொண்டமான்

(கண்டி)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச் சாமியையும் உப தலைவர் பதவியிலிருந்து மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். நடராஜாவையும் நீக்குவதெனவும் அவர்கள இருவரினதும் காங்கிரஸ் அங்கத்துவத்தையும் அகற்றுவதெனவும் இ. தொ. காவின் நிர்வாக சபையும் தேசிய சபையும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

இ. தொ. காவின் புதிய பொதுச் செயலாளராக தற்போது நிறைவேற்று நிதிச் செயலாளர் பதவியை வகிக்கும் ஆறுமுகம் தொண்டமான் நியமிக்கப்பட்டிருக்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

## யானைச் சின்னத்தில் இ. தொ. கா. போட்டி

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் போட்டியிடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் இடையே விரிவான பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் பேச்சுக்களின் போது ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும்மேலும் தெரியவருகின்றது.

## சு.க. வேட்பாளர் பட்டியல் சிறிமாவின் பார்வைக்கு

வடக்கு மாகாணத்தை தவிர ஏனைய சகல மாவட்டங்களில் சுதந்திரக் கட்சி தனது வேட்பாளர்களை எதிர்வரும் தேர்தலில் நிறுத்தும் என்றும் இது தொடர்பாக வேட்பாளர்களை தெரிவு செய்யும் வேலைகள் முடிவடைந்துவிட்டதாகவும் கட்சிப் பேச்சாளர் தெரிவித்ளார்.

மேற்படி வேட்பாளர் பட்டியல் இன்னும் ஓரிருதினங்களில் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவரின் பரிசீலனைக்கு பின்னர் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என கட்சி பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடபகுதிக்கு வேட்பாளர் நிறுத்துவது தொடர்பாக சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கருத்து கேட்கப்பட்டுள்ளதாகவும் அவர் போட்டியிடுமாறு பணித்தால் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது தொடர்பாக சிறிமாவோ பண்டாரநாயக்கா தீவிரமாக ஆலோசனை செய்து வருவதாக அப்பேச்சாளர்சுட்டிக்காட்டியுள்ளார்

## எதிர்வரும் 15-க்கு முன் இலவச சீருடைத் துணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடைத் துணி வழங்கலை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக யாழ். வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

இச் சீருடைத் துணிகள் ஒவ்வொருகோட்டங்களிற்கும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

இவற்றைப் பெற்றுக் கொண்ட கோட்டங்கள் பாடசாலை ரீதியாக மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை விநியோகிக்கும் என தெரிவிக்கப்பட்டது. (பா)

## வரி விளம்பரம்

### ஈழக்குறுநாவல் போட்டி

இப் போட்டியில் வெற்றி பெறும் குறுநாவல்கள் முதல் பத்தாயிரம், இரண்டாவது ஏழாயிரம், மூன்றாவதுமுறையே எட்டு நாவல்களுக்கும் ஆயிரம் ரூபா பணப்பரிசும் சுபமங்களாவில் பிரசுரிக்கப்படும் வாய்ப்பையும் பெறும். போட்டி விதிகள் யூன் சுபமங்களா இதழில் (8667)

### ஈழக் குறுநாவல் போட்டி

தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் சுபமங்களா சஞ்சிகை இணைந்து வழங்கும், ஈழக் குறுநாவல் போட்டி முடிவு திகதி செப்டம்பர் 30 ஆம்திகதி குறு நா வல்களை தேசிய கலை இலக்கியப்பேரவை, 15|1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம். (8666)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும் உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சகலவிதமான மணிக்கூட்டு பற்றரிகளும், உதிரிப் பாகங்களும் விற்கப்படும். சஜன்ஸ் வாச்வேக்ஸ் '12 புகையிரத நிலைய வீதி' சுண்ணாகம் சந்திக்கருகாமையில். (8670)

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, கை, வீடு பார்த்தல், குறிப்பு எழுதுதல், அதிர்ஷ்ட எண் மாற்றம் என்பவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (8696)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு மாடம் 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9900)

### யுரேனஸ் நெப்ரியூன் குருசண்டாளயோகம்

ஆகஸ்ட் 01 வரை மகரத்தில் நெப்ரியூன், யுரேனஸ்து, லாத்தில்வியாழ ராகு24.9.94 முதல் 10.10.94 வரை ஒரேபுள்ளியில் சஞ்சரிப்பதால் தேர்தல் வன்முறைகளையும் அரசியல் கொலைகளையும் உண்டாக்கும் சத்யா -கட்டுடை. (8698)

### தவறிவிட்டது

திரு- என். கே. ரகுநாதன் எழுதி அச்சில் வந்த ஆக்கங்கள் ஒட்டிவைத்திருந்த தொகுப்பு (அல்பம்) கைதவறி விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 601/2, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (8699)

### பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

ஐ. தே. கவில் இணைந்துள்ள சுதந்திரக் கட்சியின் முன்னாள் 6 எம். பி களுக்கும் மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பாதுகாப்பு பொலிசார் இருமடங்காக்கப்பட்டுள்ளனர்.

---

# I. A. B.

**DECEMBER 94**

FOUNDATION
INTERMEDIATE
FINAL

*Weekend Classes*

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

02-07-94

SHORTHAND & TYPING

*Week day Classes*

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

04- 07- 94

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd CROSS STREET.
JAFFNA

(சி-9713)

---

★ பல்வகைப் பொருட்கள்
★ அன்பளிப்பு படல்கள்
★ ஆண், பெண், தையல் சேவை
★ கொள்வனவாளர்க்கு பரிசுத் திட்டம்

மலிவு விலை சிறந்த சேவை

## "எழிலகம்"

லெப். இளங்கோ தெரு, யாழ்ப்பாணம்.

★ குறிப்பு:- யூன் மாதத்திற்கான பரிசுச் சீட்டிழுப்பு 04 - 07 - 94 திங்கட்கிழமை காலை 11- 00 மணிக்கு நடைபெறும்.

(சி-9711)

---

## 3- வது பிறந்த நாள் வாழ்த்து (01. 07. 1994)



### செல்வி சங்கீதா

பருத்தித்துறையைச் சேர்ந்த சிவஞானம் யோகராணி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி சங்கீதா இன்று 01-07-94 தனது 3- வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, திருநாவுக்கரசுமுதலி அப்பப்பா, அப்பாச்சி, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், சித்தி அம்மம்மா, இராசமணி அப்பாச்சி, செல்லு ஐயா, வியாகரத்தினம் குடும்பத்தினர், மச்சாள்மார், நீலன் அத்தான், அண்ணன்மார், தம்பி, தங்கை, மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் ஸ்ரீ ராகவேந்திரர் அருள்பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

- குடும்பத்தினர்

(8619)

---

## நினைவு கூருகின்றோம்...

### 01. 07. 1994

1987ம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா- அனந்தர்புளியங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

★ **மதன்** (பழனியாண்டி செல்வராஜா- மலையகம்)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரட்டையர் உட்பட 05 தமிழர்கள்.

திருமலை- பன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழர்கள்.

1988-ம் ஆண்டு வவுனியா- பாவற்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு காணாமல் போய் பின் சடலமாக மீட்கப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ம் ஆண்டு முல்லைத்தீவு- விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய.

**கணேஷ்** (ஜெகநாதன் சந்திரராசா- விவேகானந்தநகர்- கிளிநொச்சி)

**இலங்கேஸ்** (திசைவீரசிங்கம் இலங்கேஸ்வரன்- கோண்டாவில் வடக்கு- யாழ்)

1990ம் ஆண்டு யாழ்- காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜக்சன்** (துரைராசா இராசகுமார்- புதியதெரு, சுழிபுரம் மத்தி- யாழ்)

அம்பாறை- அறுகம்பை முகாமில்வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர்போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 03 தமிழர்கள். சம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்.

திருமலை அரசினர் மருத்துவமனைக்குள் புகுந்த சிறிலங்கா ஊர்காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்.

கந்தளாய்ப் பகுதியில் ''ஜிகாத்குழு'' வினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 24 தமிழர்கள்.

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

வசாவிளான்- ஆலடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரிமாணவன்.

1991-ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மரின்போது வீரச்சாவெய்திய,

**பிரசாத்** (பாலிப்போடி மகேந்திரன்- சித்தாண்டி -மட்டு)

**சிவானந்தன்** (நடராசா நகுலேஸ்வரன்- 208, ஜெயந்திநகர்- கிளிநொச்சி)

பலாலி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய, நாட்டுப்பற்றாளரான,

**சிவபாதம் சுரேஸ்குமார்** (ஏழாலை தெற்கு)

மட்டு-படுவான்கரைப் பகுதியைச் சுற்றிவளைத்த பெரியபோரதீவு முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதசக்திகளால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 உயர்வகுப்பு மாணவர்கள்.

1992-ம் ஆண்டு புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பலவேகய 2-ன்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.கலைவாணன்** (அருணாசலம் லவக்குமார்-விலினையடி வீதி-அம்பாறை)

**சேனன்** (தங்கராசா தங்கப்பதக்கம்-சந்தையடி, கண்டாவளை-கிளிநொச்சி)

**அன்புமாறன்-கென்றி** (அன்ரன் அருள்நேசன்- 143|1, மருத்துவமனை வீதி-யாழ்)

வவுனியாவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவெய்திய,

**2-ம லெப்.சேரன்** (சித்திரவேல் தெட்சணாமூர்த்தி- 2-ம் படிவம், தர்மபுரம்-கிளிநொச்சி)

மட்டு-ஒந்தாச்சிமடத்தில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டு வீதியோரத்தில் வீசப்பட்ட 04 தமிழர்கள்.

1993-ம் ஆண்டு கிளிநொச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

**2-ம் லெப்.கேடயன்** (பாலசுப்ரமணிய சர்மா கரிகரன்-பம்பலப்பிட்டி-கொழும்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9708)

# கடவுளின் மரணம்

அவர் ஒரு வித்தியாசமான மனிதர். அவர் வித்தியாசமாகச் சிந்தித்தார். வித்தியாசமாக எழுதினார். அவரது எழுத்து எல்லோரையுமே அதிர வைத்தது.

காலம் காலமாக மனிதன் கண்டு வந்த கனவுகளையும், கட்டி எழுப்பிய நம்பிக்கைக் கோட்டைகளையும், அறமாக வரித்துக்கொண்ட நெறிகளையும், மனித விழுமியங்களாக போற்றி வந்த உன்னதங்களையும் - எல்லாவற்றையுமே, ஈவிரக்கமின்றிச் சாடினார். எல்லாமே அபத்தம் என எள்ளி நகையாடினார்.

'அன்பு என்பது ஒரு பெரிய பொய். பயத்தில் பிறக்கும் கோழைத்தனமே அன்பு எனப்படுகிறது.'

'நீ பலவானாக இருந்தால் மற்றவனை நேசிக்கமாட்டாய். நீ பலவீனனாக, கோழையாக இருக்கும்போதே மற்றவனை நேசிக்கிறாய்.'

'கிறீஸ்தவமும் பௌத்தமும் அன்பு மார்க்கத்தைப் போதித்து அடிமைவாதத்தை வளர்த்து விட்டுள்ளன.'

'பௌத்தம் ஒரு சூன்யவாதம். வெறுமையையும் விரக்தியையும் அது விதைத்து வருகிறது.'

'கிறிஸ்தவம் ஒருஅடிமைவாதம். இரண்டாயிரம் ஆண்டுகளாக, மனிதனின் ஆன்மாவை அது சிலுவையில் அறைந்து வைத்திருக்கிறது.'

'மனிதன் ஒரு மிருகம். அவனை ஒரு தெய்வமாக மாற்ற முனைகிறது மதம்.'

'மிருகத்தன்த்தில் ஒரு இயல்பான அழகு இருக்கிறது. ஆக்ரோஷம் இருக்கிறது. துணிவு இருக்கிறது. கொடூரம் இருக்கிறது. மனித மிருகத்தின் இந்த சிறப்பான பண்புகளை சிதைத்துவிட்டு, பணிவையும், சாந்தத்தையும், கோழைத்தனத்தையும் போதிக்கும் அறநெறித் தத்துவங்களை அழித்தொழிக்க வேண்டும்.'

'எதிர்காலம் மகா மனிதனுக்கு (**SUPERMAN**) உரியது. அவன் எதற்கும் துணிந்தவனாகவும் வீரனாகவும் இருப்பான். அவனிடம் அன்பும், அறமும், காருணியமும் அறவே இருக்க மாட்டாது. அவன் ஈவிரக்கமற்றவனாக இருப்பான். பலவீனர்களையும், கோழைகளையும், முட்டாள்களையும் சகித்துக் கொள்ள மாட்டான். அவர்களை அழித்தொழிக்கவும் தயங்க மாட்டான். இந்த மகா மனிதர்களின் ஆட்சியில் தான் மானிடம் முன்னேற முடியும்.'

இப்படி எல்லாம் அவர் எழுதினார்.

அவரை ஒரு பைத்தியக்காரன் என்றார்கள். மனித குலத்தின் விரோதி என்றார்கள். கடவுளைக் கொலை செய்த மகா பாவி என்றார்கள்.

அவரது எழுத்துக்கள், சாத்தானின் சிந்தனைகள் என இழிவுபடுத்தப்பட்டன.

அவர் மனம் முறிந்து இறந்துபோனார். ஆனால் அவரது சிந்தனைகள் செத்துவிடவில்லை. நாசிசவாதிகளிலிருந்து இருப்பியல்வாதிகள்வரை பலர் அவரைத் தமது ஆதர்ஷ குருவாக வரித்துக் கொண்டனர்.

யார் இந்த மனிதர்?

அவர் தான் நீச்சே (**NIETZSCHE**). ஜேர்மானிய அறிஞர். தத்துவப் பேராசிரியர். 1844-ம் ஆண்டு பிறந்தார். 1900-ல் மடிந்தார். சாராம்சத்தில் அவரது தத்துவார்த்த எழுத்துகள் மானிடத்திற்கு ஒரு உண்மையை இடித்துரைக்க விரும்புகிறது. ஒருசெய்தியைச் சொல்ல விரும்புகிறது. அந்தச் செய்திதான் என்ன?

மனிதன் நம்பிக்கைகளை மூட்டை கட்டி, தாங்கொணாப் பளுவாக, தனது சக்திக்கு மிஞ்சிய சுமையாக சுமந்து செல்கிறான். சதா பொய்களைப் புசித்து போலி வாழ்க்கை வாழ்கிறான். இல்லாதவொன்றைத் தேடி அலைகிறான். அர்த்தமற்ற வாழ்வில் அர்த்தமிருப்பதாக எண்ணுகிறான். அவன் சதா தேடி அலையும் அது, அவன் எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும் அது, அவனது வாழ்வுக்கே அர்த்தம் கொடுக்கும் அந்த மாயப் பொருள், அவனைப் படைத்து காத்துவருவதாக அவன் கற்பிதம் பண்ணும் அந்தக் கடவுள், எப்பொழுதோ செத்து விட்டார். இந்த இழவுச் செய்தியையே மனித குலத்திற்கு பறையறைந்து சொல்ல விரும்புகிறார் நீச்சே.

**THUS SPAKE ZARATHUSTRA** என்ற அவரது நூலொன்றில் வரும் கீழ்க் கண்ட பந்திகள் இந்தச் செய்திடை இலக்கியச் சுவையோடு சொல்கின்றன;

''சாரதுஷ்ரனுக்கு முப்பது வயதானதும், துறவற வாழ்வைத் தழுவிக் கொள்கிறான். வீடு துறந்து காடு செல்கிறான். பத்தாண்டு காலம் கடும் தவம் இருக்கிறான். தனிமையில், அமைதியில் ஆன்மீகத் தேடலை நடத்தி முடிக்கிறான். ஞானோதயம் பெறுகிறான்.

அன்று காலை, என்றுமில்லாதவாறு அவனது மனதில் ஒரு புத்துணர்வு. மனித குலம் மீது மனம் திரும்பியது. அந்த இருண்ட குகையைவிட்டு வெளியே வந்தான். உதய சூரியன் அவனை வரவேற்றது.

'கதிரவனே, உனது ஒளியில் உயிர் வாழும் உலகத்தோர் இல்லாதொழிந்து போனால் உனக்கு மகிழ்வுமில்லை, மகிமையுமில்லை. பத்தாண்டு காலமாக, தினமும் எனது குகை வாசல் வந்துபோகிறாய். உன்னை ஆவலுடன் தரிசித்துவரும் நானும், இந்த வன விலங்குகளும் இல்லாது போனால், வெளிச்சத்தை கொடையாக வழங்கும் உனது பணியும், முடிவில்லாத, சலிப்பில்லாத உனது பயணமும் அர்த்தமற்றுப் போய்விடும்.'

''தேவைக்கு அதிகமாக தேனைச் சேமித்து சலித்துப் போன ஒரு தேனீ போன்று ஞானத்தின் பழுவை நான் சுமந்து நிற்கிறேன். நான் சேமித்து வைத்திருக்கும் ஞானத்தேனை உலகத்தாருக்கு பகிர்ந்தளிக்க விரும்புகிறேன். மனிதர்களிடம் சென்று நான் மீண்டும் மனிதனாக வாழ விரும்புகிறேன்.'

இந்தப் பிரதிக்ஞையுடன் சாரதுஷ்ரன் தனது வன வாசத்தை முடித்துக் கொண்டான். மலையிலிருந்து இறங்கி கிராமம் நோக்கி நடந்தான். மலையடிவாரத்தில் காட்டு வழியே சென்று கொண்டிருந்தபோது அந்த வயோதிப முனிவனைச் சந்தித்தான். அந்தத் துறவி சாரதுஷ்ரனை இனம் கண்டு கொண்டான்.

'சாரதுஷ்ரா, நீ தனிமையில் வாழ்ந்து தவமிருந்து, ஞானோதயம் பெற்றுள்ளாய். விழிப்பு நிலை அடைந்து விட்டாய். மனிதர்களோ சதா தூக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களிடம் உனக்கு என்ன வேண்டியிருக்கிறது' என்று கேட்டார் அந்தத் துறவி.

## பிரம்மஞானி

'நான் மனித குலத்தை நேசிக்கிறேன்' என்றான் சாரதுஷ்ரன்.

'மனித குலம்மீது அளவுகடந்த பாசம் கொண்டதால் அல்லவா நான் வனவாசம் சென்றேன். நான் இப்பொழுது கடவுளை நேசிக்கிறேன். மனித சமூகத்தை அல்ல. மனிதன் தூய்மையற்றவன். முழுமையற்றவன். மனித குலம் மீது அன்பு செலுத்தினால் அது என்னை அழித்துவிடும்' என்றார் முனிவர்.

'நான் மனித குலத்திற்கு ஒரு நன்கொடையை கொண்டு செல்கிறேன்' என்று பதிலளித்தான் சாரதுஷ்ரன்.

'மனிதர்களுக்குஎதையும்கொடுத்து விடாதே. வேண்டுமென்றால அவர்களிடமிருந்து எதையாவது பிடுங்கிக்கொள். மனிதர்கள் துறவிகளை சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள். நாம் கொடுக்க வந்துள்ளோம் என்றால் நம்பமாட்டார்கள். வீதி வழியே, தனிமையில் எமது காலடியோசை இரவின் மௌனத்தைக் கலைக்கும் பொழுது, படுக்கையிலிருந்து அதை உற்றுக் கேட்கும் மனிதர்கள் எவ்வாறு எண்ணுவார்கள் தெரியுமா? இந்தக் திருடன் எங்கே போகிறான் என்று. ஆகவே, சாரதுஷ்ரா, இந்தக் கெட்ட மனிதர்களைத் தேடி போகாதே. இந்தக் காட்டில் தங்கியிரு. மனிதர்களைவிட இந்தக் காட்டு மிருகங்கள் மேலானவை. மிருகங்களைநாடிப்போ. என்னைப் போல. உன்னால் சீவிக்க முடியாதா? மிருகங்களில் ஒரு மிருகமாக, பறவைகளில் ஒரு பறவையாக' என்றார் துறவி.

'முனிவரே, இந்தக் காட்டில் இத்தனை காலமும் என்ன செய்து வருகிறீர்கள்?'

'நான் பாட்டுகள் இயற்றுவேன், பாடுவேன். நான் பாட்டுகள் புனையும்போதும் பாடும் போதும், சிரிப்பேன், அழுவேன். எனக்குள் சும்மா முணுமுணுப்பேன். இவ்வாறு நான் கடவுளைத் துதிபாடுகிறேன். நான் கடவுளைக் காதலிப்பவன். எனது பாட்டில், சிரிப்பில், அழுகையில், முணுமுணுப்பில் - எல்லாவற்றிலும், நான் கடவுளைத் தரிசிக்கிறேன், வணங்குகிறேன். அது இருக்கட்டும், எமக்காக, மனிதர்களுக்காக என்ன நன்கொடை கொண்டு வந்திருக்கிறாய்?' என்று கேட்டார் அந்த முனிவர்.

'நான் உங்களுக்கு எதையும் கொடுக்கவும் வரவில்லை. உங்களிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ளவும் விரும்பவில்லை' என்று கூறிவிட்டு அங்கிருந்து விரைந்தான் சாரதுஷ்ரன்.

அவன் தனிமையில் செல்லும்பொழுது தனக்குள் வருத்தப்பட்டுக் கொண்டான். 'இந்த வயோதிப முனி இன்னும் கேள்விப்பட வில்லைப் போலும், கடவுள் இறந்து விட்டார் என்பதை.'

கடவுள் மரணித்துவிட்ட செய்தியையே மனித குலத்திற்கு நன்கொடையாக எடுத்துச் சென்றான் சாரதுஷ்ரன்.

மேற்குலக தத்துவ தரிசனத்தில் நாத்திகவாதம் புதிதான, புரட்சிகரமான கருத்தோட்டம் அல்ல. கடவுட் கோட்பாட்டை மறுதலித்து எத்தனையோ பேர் எழுதியிருக்கிறார்கள். கிரேக்க பொருளியவாதிகளிலிருந்து, போயர்பாக் கார்ல்மார்க்ஸ் வரை. நீண்ட வரிசையில், காலத்திற்கு காலம் எத்தனையோ சிந்தனையாளர்கள் கடவுட் கோட்பாட்டை தகர்த்துவிடமுனைந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது நீச்சேயின் நாத்திகம் ஏன் இத்தனை பிரபல்யம் பெற்றது? கடவுள் இறந்துவிட்டார் என அவர் விடுத்த பிரகடனம் ஏன்இத்தனை சிலுசிலுப்பை ஏற்படுத்தியது?

கடவுளின் மரணத்துடன் மனித இருப்பு அர்த்தத்தை இழக்கிறது. மனித வாழ்வு அபத்தமாக மாறுகிறது. மனித நம்பிக்கைத் தூண்கள் இடிந்துபோகின்றன. இருப்பின் மறுபக்கமான இல்லாமை தவிர்க்க முடியாத பேருண்மையாக விஸ்வரூபப் பரிமாணம் கொள்கிறது. ஏன், எப்படி, எதற்காக என்ற காரண காரியங்கள் அர்த்தமற்று வலுவிழந்து போக மனித வாழ்வில் இருள் சூழ்ந்து கொள்கிறது. முடிவில்லாப் பிரபஞ்சத்தின் எங்கோ ஒரு மூலையில் நின்றபடி மானிட இனம் பாதை தெரியாது தடுமாறுகிறது. தனித்துப்போய் நிற்கிறது. நிச்சயமானது ஒன்றாக இல்லாமையே இருப்புக் கொள்கிறது.

நீச்சேயின் நாத்திகம் கடவுளின் மரண சாசனத்தை மட்டும் எழுதிவிடவில்லை. கடவுள் இல்லாத உலகில், மனித இருப்பின் அவலமான நிலையற்ற தன்மைபற்றியும் எடுத்துக்கூறுகிறது. கடவுளின் சாவுடன் மனிதனின் கனவுகளும் செத்துப்போய்விடுகிறது என்ற கோரமான உண்மையையும் அது எடுத்தியம்புகிறது.

அனந்த காலமாக, அனைத்திற்கும் அதுவே அர்த்தம் கொடுத்தது. இருப்பிற்கும் அதுவே இலக்கணம் வகுத்தது, வாழ்விற்கும் அதுவே விளக்காக இருந்தது,

அதன் நிழலில், மனிதன் நிம்மதியாக உறங்கினான். அதன் நினைவில், தனது சோகத்தை துடைத்துக்கொண்டான். அவனது வாழ்வின் அனைத்து அம்சங்களையும் அதுவே ஆட்கொண்டு நின்றது. அந்தக் கடவுளின் குழந்தையாக மனிதன் தன்னைக் கற்பித்துக் கொண்டான்.

அந்தக் கடவுள் இப்பொழுது இறந்து விட்டார். நிரந்தரமாகவே அந்தச் சூரியன் அஸ்தமித்துவிட்டது.

கடவுளின் இறப்பிற்கு காரண கர்த்தா யார்? படைத்தவனை அழித்தவன் யார்? அது மனிதன்தான் என்கிறார் நீச்சே.

**THE GAY SCIENCE** என்ற நூலில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் நீச்சே;

''காலைவேளை, சூரியன் சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த அந்த நேரத்தில் பைத்தியக்காரன் ஒருவன் கையில் விளக்கை ஏந்தியவண்ணம் சந்தைகூடும் அந்த இடத்திற்கு ஓடிவருகிறான். அங்கிருந்த மக்களைப் பார்த்து, 'நான் கடவுளைத் தேடி அலைகிறேன். நான் கடவுளைத் தேடி அலைகிறேன்'' என்ற உரத்த குரலில் கத்தினான்.

''கடவுள் எங்கே இருக்கிறார்? உங்களுக்குத் தெரியாதா? நான் சொல்கிறேன், அவர் எங்கே இருக்கிறார் என்று. நீங்கள் கடவுளைக் கொலை செய்து விட்டீர்கள். நீங்களும் நானுமாகச் சேர்ந்து கொலை செய்து விட்டோம். நாம் எல்லோருமே கொலைகாரர்கள். அந்தப் பெரும் கடலை, எல்லையற்ற சமுத்திரத்தை நாம் எவ்வாறு குடித்து முடித்தோம்? அந்தப் பிரகாசமான அடிவானத்தை எதைக்கொண்டு அழித்துவிட்டோம்? சூரியனிலிருந்து இந்தப் பூமியை நாம் கட்டவிழ்த்து விட்டது எப்படி? இந்தப் பூமி இப்பொழுது எங்கே அசைந்து செல்கிறது? சூரியனிலிருந்து அறுபட்ட இந்தப் பூமியானது அதள பாதாளத்தில் விழுந்து கொண்டிருக்கிறது. அது வழி தெரியாது எல்லாத் திசைகளிலும் சுழல்கிறது. நாம் முடிவில்

(06 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுகதை

# பவனி

ந. கிருஷ்ணசிங்கம்

"எட மோகன்! மெல்லமா ஓடிற எண்டால் ஓடு; இல்லாட்டி என்ன சயிக்கிலாலை இறக்கிவிடு..."

"என்ன மாமா! இந்தத் தம்பிப்பிள்ளையத் தெரிய இல்லையோ?... எண்டு, பெரிய சண்டித்தனமல்லாம் கதைப்பியள... சயிக்கிலிலை இருக்கப் பயப்பிடுறியள்!"

"எட, நீ இளந்தாரி! விழுந்து முறிஞ்சாலும் எலும்பு பொருந்தும் நான் பழசு; விழுந்தால் பிறகென்ன படுக்கையிலை கிடக்க வேண்டியதுதான்."

"மாமா யிஞ்சைபாருங்க... உங்கட முன்வட்டுச் சிவாவும் அவற்றை செற்றும் போற போக்க!"

'ஓமெண்டிறன்! தோளுகளிலை கைபோட்டபடி... மும்மூண்டு சோடியளாயல்லோ சயிக்கில் விடுகினம்! .. புளிச்சல் மட்டையாலை புறடிவளிய சாத்தவேணும் ஓ!"

"அம்புலன்ஸைக் கூட விலத்திப் போகவிடாமல்... அங்கைபாரன் அவையின்ரை சேட்டய!..."

"ஜந்த ந்லத்திலை என்ன நடக்குது? எங்களப்போலை இளந்தாரியள் குமற்பிள்ளையள் சண்டபிடிச்சு... ஏன் சாகுதுகள? எண்டு; ஒரு உணர்ச்சியில்லாமல் என்னத்துக்கு என்ரை வாயில வருகுது உப்ப..."

தம்பிப்பிள்ளையர் தன்னுள் சபித்தபடி; மோகனின் மென்மையான சயிக்கில் ஓட்டத்தில் பிரதான வீதியைத் தாண்டி; குறுக்கு வீதியுள் நுழைகிறார்.

தோட்டம் கொத்தி உழைத்து தேட்டம் தேடி; தனது மூன்று குமருகளைக் கைபிடித்துக் கொடுத்ததோடு; மகனையும் மருத்து வராக்கி.. மண்ணுக்குத் தொண்டாற்று மாறு கூறி.. தம்பிப்பிள்ளையர் தலைப்பாரம் இறங்கியவராய் இன்று நடமாடித் திரிகின்றார்.

"அப்பர் நேரவந்தவர்... மாமாவைக் கண்டிட்டாக்கும் ஒழுங்கையாலை வெட்டி ஓடிறார்!"

"கொப்பர் வெட்டி ஓடாமல் என்ன செய்வார்? நரிக்கள்ளனடா கந்தையன்! அப்பாடா.! காலும் விறைச்சுப் போச்சு!.. இறக்கிவிடு இதிலை ..! இனி நான் போவன்!'

"சரி மாமா! மெள்ளமா இறங்குங்க!"

"இஞ்ச யமுனாவும் வாறாள்! நான் தைச்சுக் கொண்டு போவன் நீ போடா தம்பி" என்று; மோகனுக்கு விடை கொடுத்து; ஊன்றி அடிபதித்து.. முதுமைத் தளம்பல் தலைகாட்டாது; தம்பிப்பிள்ளை அப்பு.. குறும் சிரிப்பை இறைத்தபடி;... யமுனாவோடு கூடிப் போகிறார்.

"என்ன அங்கிள் சிரிக்கிறியள்?" "சிரிச்சு வாழவேணும் பிள்ளை. அதுபோக; பொடியளையும் இழுத்துக் கொண்டு.. எங்கினை பயணம்?" "டொக்டரிட்டை போறன் அங்கிள!" "ஏன்ரி பிள்ளை! பெடியனுக்கு என்ன சுகயீனம்?" "யவ்னா கிளமற் எங்களுக்கு ஒத்துவருகுதில்லை. சூட்டுக்குப் பாருங்கோ. பிள்ளையளுக்கு வாய் வயிறெல்லாம் அவிஞ்சு போச்சுது! களம்பு நல்லது .. என்ன செய்யிற?..." யமுனாவின் பேச்சு தம்பிப்பிள்ளையரின் தன்மானத்தைத் தீண்டிவிடுகின்றது.

"பின்னை.; அங்கை இருக்காமல் இஞ்சை என் வந்தனியள்?..." இதற்குமேல் கதைக்க முடியாது; ஆத்திரத்தால் கிழவரின் குரல் கட்டிக் கொண்டது.

"அவருக்கு கொழும்புச்சீவியம் அலுத்துப்போச்சாம்... வெளிக்கிடு போவம் எண்டு இழுத்துக் கொண்டு வந்திட்டார். சரியான வெயில் .. புழுதிக்காத்து .. ராவிலை வேர்வ பகலிலையும் வெக்கை! என்னண்டு" குறுக்கிட்டதம்பிப்பிள்ளையர்

இந்த வெயில் - இந்தப்புழுதிக்காத்து வெக்கை எல்லாம் இம்மண்ணின் வாசனைகள் உன் கொப்பன் கொப்பாட்டன் என உனது பரம்பரையே ஓடிவிளையாடிய மண். வேர்வை சிந்தி வளமாக்கிய மண் இந்த மண்ணிற்காகவே இன்று பல ஆயிரம் உயிர்கள் தம்முயிரைத் துறந்துள்ளனர்.

இன்னும் அவர்களின் பாதுகாப்பிலேயே நீயும் நானும் பாதுகாப்பாய் இருக்கிறம். பேய்க்கதை கதையாமல் வா எனத்தன்னுள் புறுபுறுத்துக் கொண்டு போகும் பெரியவரைத் தொடர்ந்து போனாள் ஜமுனா.

சிறியதொரு மௌனத்துக்குப்பின் தம்பிப்பிள்ளையரின் குரல் மீண்டு ஒலித்தது. "எடிபிள்ளை! ஒழுங்காகுளிக்கவார் பெடியளுக்கு ஒருவியாதியும் வரா சும்மா முகத்தை துடைச்சு... பவுடரை அப்பி. சென்றுகளைத் தெளிச்சால் மட்டும் போதாது" என்றவர்; ஒழுங்கை ஒன்றால் திரும்பி; ஊறைப்பாகக் கால் பதித்து. உணர்வோடுஉசார் நடை போட்டார்.

கொதிநிலையில்வந்து சைக்கிளால் குதித்த கந்தையரைக் கண்டு; மனைவி மரகதம் சற்றுப் பயந்துபோனாள்

"என்னப்பா! போனதும் வந்ததுமாய் வந்து குதிக்கிறியள்? என்ன.. சொன்ன இடத்தை போக ல்லையே?" என்றவள் சினம் துடிக்கும் சொண்டோடு நின்ற கணவரை கூறுகுறிப்போடு பார்த்தாள்'

"எங்கை போனாலும் .. அந்த நாசங்கட்டின தம்பிப்பிள்ளை கிளடன்ரை தலை தானை தெரியுது. நாடகம் எழுதிப் போட்டியோ? எழுதிப் போட்டியோ எண்டு .. கண்ட இடமெல்லாம் கழுத்தை அறுக்கிறான்"

"ஏனப்பா! எந்தப்பெரிய அண்ணாவியற்றை மோன் நீங்கள். ஒண்டை எழுதிக் குடுங்கவன். கிழவன் ஊர் வாசிகசாலையிலை நடிக்க எண்டுதானை கேட்ட .."

'குடுக்கலாம் அப்பா! ஆனால்; அந்தாள்பழைய நாடகம்ஒண்டைஎடுத்து .. போராட்டத்துக்கு ஏத்ததாய்மாத்தி எழுதித் தரட்டாமல்லோ! உன்ரை மோன் மோகன் கிளவனோடை வலு ஒட்டு... அவன்தான் தூண்டிறான் போலை; வரட்டுக்கும் .. கேட்கிறன் கழுதைய!" கந்தையர் மகனைப் பேசியது பிடிக்காத மரகதத்தின்குரல் சற்று ஓங்கி நிமிர்ந்தது.

"ஏன் பிள்ளையை பேசிறியள்! உங்களுக்கு எழுதிக் குடுக்கப் பயம் ஆமிவந்து சுடும் வெட்டும் எண்டு ஏக்கம்! ஒரேயடியா மாட்ட எண்டு சொன்னால் மனியன் வேறு ஆரையும் பார்க்கும் தானே?"

"சரியப்பா! செம்புத்தண்ணியக் கொண்டா குடிப்பம்" தண்ணீர் செம்பை நீட்டிவிட்டு! மரகதம் தனது தாக்குதலை மறு முனை ஒன்றால் தொடங்கினாள்.

"விழுந்தடிச்சுக்கொண்டு .. கனடாவிலை இருக்கிற அருளன்ரை தேப்பன்ரை செத்த வீட்டுச் சிலவைச்செய்தியள்... இதுவரை அவன் ஒரு சதக்காசு இல்ல ஒரு காயிதம் அனுப்பினானே? செத்த வீடும் நடந்து எட்டு நாளாச்சு! ... என்ன முடிவப்பா?' கேள்வியால் கிளறியவளைப் பார்த்து .... கந்தையர் புன்னகை ஒன்றைப் பூக்கவிட்டபடி...

"இஞ்சை மரகதம்! இந்தக் கதிரேசு கந்தையனை என்னண்டு இனச்சா? எடியாத்தே ...! ஒரு லச்சம் ரூபா செலவு போட்டல்லோ காயிதம் எழுதியிருக்கிறன் ..... "அவரின் மணிச் சிரிப்பு ஒயுமுன்.

'என்னப்பா! ஒரு 'லச்சமோ? அருளன் நம்புவானே இதை?"

"மரகதம்! கனடாக்காறனுக்கு ஒரு லச்சம் ஒரு காசில்ல! அவன் வரக்காட்டுவான் நீ பேசாமல் என்ரை காகிதத்தைக் கேள் .." என்று கூறியபடி கந்தையர் அருளனுக்கு எழுதிய அந்தக் காகிதத்தை உரக்க வாசிக்கவும் .. அவரின் மனைவி மண்டையில் கைவைத்தபடி, பிளந்த வாயோடு அமர்ந்து கொண்டாள்.

"கொப்பரை பிறைவேற் நேசிங்கோமில் வைத்து பார்த்த செலவு ரூபா பத்தாயிரம் சவக்கிருகை - மேளம் - தண்டிகை - முதிரைப்பெட்டி முதலான செலவுகள் ரூபா முப்பதாயிரம் பந்தல் - கதிரை - வெற்றிலை - சிகரெற் முதலியன இருபதாயிரம் .."

பட்டியல் வாசித்து முடியுமுன் பதைப்போடு மரகதம் குறுக்கிட்டு குமுறுகிறாள்.

'கடவுளே உதென்ன பொய்யளப்பா? அனாதையாக் கிடந்து வீட்டிலை செத்த மனிசனை தள்ளுவண்டியிலை கொண்டுபோய் தாட்டகதை ஊரெல்லாம்தெரியும். நேசிங்கோமிலை வைச்சுப் பாத்த... சவக்கிருகை செய்த - மேள தாளம் பிடிச்ச எண்டெல்லாம் கணக்கு விடுகிறியள் .. உதைப் பெடியன் அறிஞ்சால் எங்கடை மானம் போகுமல்லோ? உங்களுக்கு ஏன் இந்த அம்பாயம்" மரகதம் பொரிந்து கொட்டிக் கொண்டிருக்க கந்தையர் அவளை அடக்கும்தொனியில் மிரட்டினார்.

"பொத்துவாய்! கனடாவிலை இருக்கிற அவனுக்கு உண்மையை ஆர் எழுதப்போயினம்? உந்த முத்திரைத் தட்டுப்பாட்டுக்கை, வேலைமினக்கெட்டு .. ஆர் இங்கை எழுத ஆளிருக்கு? நீ அலட்டாமல் இருந்தால் இதுகள் வெளியாலை வரா விளங்குதே?" என்ற கந்தையர் காகிதத்தை கவருக்குள் திணித்து... துப்பல் தடவுகிறார்.

"கந்தையா! கனடா காகிதம் வாசித்து முடிந்துதோ?" என்ற தம்பிப்பிள்ளையின் குரல் கேட்டு தம்பதிகள் ஸ்தம்பித்துப் போகிறார்கள்.

"எடதம்பி கந்தையா! நீ செத்தவீட்டுச்சிலவு சித்தாயங்களைவாசிக்கதுவங்கவேநான் வந்திட்டன். திட்டம் வலு பெரிசாத்தான் போட்டிருக்கிறா! என்ரை காதிலை விழுந்த பிறகு .. உதெங்க நிறைவேறப்போகுது?" பெருத்த சிரிப்போடு தம்பிப்பிள்ளைக்கிழவர் புறப்பட்டுப்போகிறார்.

சஞ்சலத்தோடு கந்தையர் சிலையாகி நிற்க, மரகதம் கனடா செல்லவிருந்த காகிதத்தை கிழித்து, காற்றிலே பறக்கவிட்டார்.

---

# எரித்திரியா

# ஒரு நாட்டின் உதயம் - ஒரு பார்வை

வவுனியா-திலீபன்

எரித்திரியா...

ஐம்பது வருட போராட்டத்தின் பின்னர் விடுதலையடைந்துள்ளது.

ஒரே நேரத்தில் அறுபது குண்டுவீச்சு விமானங்கள எரித்திரியா மக்கள் மீது குண்டு மழை பொழிந்தன

ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டனர்

விழுந்த மக்கள் மீண்டும் மீண்டும் எழுந்து வீராப்புடன் போரிட்டனர்.

நீண்டகால போருக்குப் பின்னர் எரித்திரியாவில் புதிய சூரியன் உதயமாகியுள்ளது.

விடுதலை வெளிச்சத்தைத் தரிசனம் செய்யத் துடிக்கும் அத்தனை மனங்களிலும் இச்செய்தி பூப்பூக்க வைத்துள்ளது.

எத்தியோப்பியா என்ற எதேச்சதிகார அரசுக்கு எதிராக இடம்பெற்ற போரில் இதுவரை 60,000 க்கும் மேற்பட்ட எரித்திரியப் போராளிகள் தம் உயிர்களைத் தியாகம் செய்துள்ளார்கள.

40,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

90,000க்கும் மேற்பட்ட அநாதைகளும், ஆதரவற்ற குழந்தைகளும் இருந்து வருகிறார்கள்

10,000 ஆண், பெண் போராளிகள் நடமாட முடியாதளவில் ஊனமுற்றுள்ளார்கள்.

> **எத்தனையோ இழப்புகள், தியாகங்களுக்கு பின்னர் எரித்திரியா விடுதலை பெற்றுள்ளது...**
>
> **எரித்திரிய மக்கள் சுதந்திரக் காற்றை உள்ளிழுக்கின்றனர்.**

இத்தனை தியாகங்களின் பின்னர் எரித்திரிய மக்கள் உலகப்படத்தில் புதிய கோட்டை வரைந்தனர்

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் துறையினரால் சமீபத்தில் 'எரித்தியா - ஒரு நாட்டின் உதயம்' என்ற 22 கட்டுரைகள் அடங்கிய மொழி பெயர்ப்பு நூல் ஒன்று தமிழில் வெளியிடப்பட்டுள்ளது

எரித்திரியப் போராளிகள், பொதுமக்களின் புகைப்படங்கள் அடங்கிய அட்டையுடன் இந்தநூல் வெளிவந்துள்ளது.

அடக்குமுறை அரசிற்கெதிராக பல ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழீழ மக்களுக்கு இந்தப் புத்தகம் பெரிதும் உதவும்

இலங்கையை விடவும் ஏறக்குறைய இரண்டு மடங்கு பெரிய நிலப்பரப்பைக் (1, 24, 000 ச. கி. மீ.) கொண்ட எரித்திரியர்கள் சனத்தொகையில் ஏறக்குறைய ஈழத்தமிழரின் தொகையை (35 லட்சம் ஒத்தவர்கள். இத்தகைய பெரிய நிலப்பரப்பை சிறிய தொகையான மக்கள் எதிரியிடமிருந்து மீட்டெடுத்துள்ளனர் என்பது மட்டுமல்ல; தமதுதாய் மண்ணை தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றனர் என்று அந்நூலின் பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது கவனத்திற்குரியது.

இந்த நூலை சற்றுவிரிவாக நோக்குவோம்.

ஆரம்பத்தில் வெளிநாட்டுத் தலையீடுகள் ஒவ்வொன்றும் எரித்திரியா ஒரு நாடாக உருவாகி வருவதிலும் எரித்திரியர்களின் தனித்துவம் ஒன்று அமைவதிலும் வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தின.

1940 ஆம் ஆண்டளவில் எரித்திரியா பற்றிய எதியோப்பியர்களின் திட்டங்கள் தெளிவாகத் தெரிந்தன.

வல்லரசுகளின் ஆதரவுடன் எரித்திரியா, எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது.

1950ஆம் ஆண்டுகளில் எதியோப்பிய மன்னர், இணைப்பாட்சியில் சொந்த யாப்புடனும், சொந்த மக்கள் சபையுடனும் இயங்கி வந்த எரித்திரிய நிர்வாகத்தின் அதிகாரங்களை படிப்படியாகக் குறைத்து வந்தார். அவர் தொழிற்சங்கங்களைத் தடைசெய்தும் பத்திரிகைகளுக்கு மூடுவிழா நடத்தியும் நீதிமன்றங்களின் தீர்ப்புகளை அவமதித்தும், உள்நாட்டு மொழிகளைத் தடை செய்தும், ஈற்றில் தனது கொடுமை வாய்ந்த படையைப் பிரயோகித்தும் அரசியல் யாப்புப்படி எரித்திரிய மக்களுக்கிருந்த உரிமையையும் மீறி நடந்தார்.

> **வெளியீடு:**
> **அரசியற்துறை**
> **தமிழீழ**
> **விடுதலைப் புலிகள்**

ஆம்; ஒரே ஆட்சி எனப் பிரகடனப்படுத்திக் கொண்டு ஒரு பகுதி மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுத்ததனால் அந்த மண்ணில் யுத்தம் தொடங்கியது. இது சிறிலங்கா சிங்கள ஆட்சியாளர்களினால் மாறிமாறி தமிழ் ஈழமக்கள் நசுக்கப்பட்டமையை ஒத்ததாகவே உள்ளது.

பத்து ஆண்டுகளின் பின்னர் அனைத்துலக சட்டங்களுக்கு மாறாக எதியோப்பியா எரித்திரியாவை தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இதை ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது அதனது எந்த உறுப்பு நாடுகளோ எதிர்த்துக் கேட்கவில்லை. அனைத்துலகம் மௌனம் சாதித்தது.

ஆயுதப் போராட்டம் அங்கு

(11 ஆம் பக்கம் பார்க்க)

# சகராவி மக்களை சறுக்கி விழவைத்த ஐ. நா.

**1973**ஆம் ஆண்டிலிருந்து வீரம் செறிந்த போராட்டம் ஒன்றை நடாத்தி வந்தமேற்கு சகாராவின் சகராவி மக்கள் குறித்தும் அவர்களது விடுதலை அமைப்பான பொலிசாரியோ முன்னணி பற்றியும் 1991ஆம் ஆண்டு ஐ.நா. ஏற்படுத்திய போர் நிறுத்தத்தின் பின் அதிகம் செய்திகள் வருவது கிடையாது. எனினும் எழுபதுகளிலும் எண்பதுகளிலும் அவர்களது வேகம் மிக்க போராட்டம் உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்திருந்தது. ஏனென்றால் மிக நீண்ட காலமாக தம்மை அடிமைப்படுத்திய ஸ்டானியர்க்கு எதிராக மட்டுமன்றி, பின்னர் தமது தாயகத்தை பங்கிட முயன்ற மொரித்தானியாவுக்கும், மொரோக்கோவுக்கும் எதிராக அவர்கள் தளராது அயராது கொடிய பாலை நிலச் சூழலில் வெம்மையையும்பொருட்படுத்தாதுபோராடியவர்கள். வடமேற்கு ஆபிரிக்காவின் நீண்டுவிரியும் சகாரா பாலைநிலத்தின் ஒரு பகுதியாக மேற்கு சகாரா அமைந்த போதும் சகராவி மக்களின் குருதியால் அது புனித தாயகமாக்கப்பட்டது. மேற்கு சகாராவை ஒரு தனி நாடாக சகராவி அரபு சனநாயகக்குடியரசு(**SADR-Sahrawi Arab Democratic Republic**) என 1976ஆம்ஆண்டே பொலிசாரியோ அறிவித்தது. அதன் பின் அதனை இற்றைவரை 70 நாடுகள் அங்கீகரித்துவிட்டன. அது இன்று **OAU** எனப்படும் ஆபிரிக்க ஒன்றியத்தின் உறப்பு நாடு. ஐ.நா. வால் அங்கீகரிக்கப்பட்ட தேசம். ஆனால் குறிப்பாக 1991ஆம்ஆண்டு மேற்கு சகாராவிற்கும் மொரோக்கோவிற்கும் இடையேயான சிக்கலில் ஐ நா. தலையிட்ட பின் உலகம் சகராவிமக்களை மறந்து போய்விட்டது. ஆனால் இப்போது கிடைக்கும் தகவல்களோ பெரும் அதிர்ச்சியை ஊட்டுவனவாக அமைகின்றன. ஐ. நாவின் இயலாமையை மட்டுமல்ல அதன் நம்பகத்தன்மையே இப்போது சகராவிமக்களால் கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்டது. ஐ. நாவின் தோல்விப்பட்டியலில் சகராவிக் குடியரசும் சேர்ந்துவிடுமோ என்கிற ஐயப்பாடு இப்போது தோன்றிவிட்டது.

எனவே மேற்கு சகாராவில் இதுவரை என்ன நடந்தது? இப்போது என்ன நடக்கிறது என்பது நாம் அறிய வேண்டிய சங்கதியாகிறது. ஏனென்றால் தமது விடுதலைப் பயணத்தில் சகராவி மக்கள் அடைந்த துன்பங்கள் கடந்த இக்கட்டான காலகட்டங்கள் கொஞ்சநெஞ்சமல்ல. தொடக்கத்தில் ஸ்பெயினுக்கு எதிராக சகராவி மக்கள் போராடினார்கள். மிக நீண்ட காலமாக மோசமான அடக்குமுறையின் பின்னர் 1960களி தமது எதிர்ப்பை காட்டத் தொடங்கியவர்கள்1973இன் மே மாதமளவிலேயே தமக்கென விடுதலை அமைப்பாக பொலிசாரியோ முன்னணியை **(Polisario Front)** உருவாக்கினர். ஸ்பெயினுக்கு எதிராக லிபியாவின் உதவியுடன் பெரும் கெரில்லா போராட்டங்களை இவர்கள் மேற்கொண்டனர். இவற்றிற்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் உலக அபிப்பிராயத்தை மீறி நடக்க முடியாத நிலையில் ஸ்பெயின் வெளியேற வேண்டிய நிலை 1975 இல் ஏற்பட்டது. ஆனால் எளிதில் வெளியேற விரும்பாத ஸ்பெயின் இன்னோர் மோசமான சதிவேலை ஒன்றை மேற்கொண்டது. மேற்கு சகாராவின் அயல் ஆபிரிக்க நாடுகளான மொரித்தானியாவிற்கும்மொரோக்கோவிற்கும்மேற்கு சகாரா மீது உரிமை கோரும் ஆவல் இருப்பதை பயன்படுத்தி இரகசியஉடன்பாடொன்றிற்கு இவற்றோடு ஸ்பெயின் வந்தது. இதனால் இவை மேற்கு சகாராவை தமக்குள் பங்கு போட ஸ்பெயின் வழி வகுத்தது. இதனால் விடிவை எதிர்நோக்கிய மேற்கு சகாராவின் வடபகுதியை மொரோக்கோவும் தென் பகுதியை மொரித்தானியாவும் ஆக்கிரமிக்க முற்பட்டன. மொரோக்கோ மன்னர் இரண்டாம் கசனோதனது 3இலட்சம் இசுலாமிய மக்களை பேரணியாக 1975 நவம்பர் மாதமளவில் மேற்கு சகாராவில் ஊடுருவச் செய்தார். அதே மாதம் மாட்ரிட் உடன்பாடு என்கிற பெயரில் இவர்களது ஆக்கிரமிப்பை ஸ்பெயின் ஏற்று தனது படைகளை மேற்கு சகாராவிலிருந்து மீளப்பெற்றது. ஸ்பெயின் விட்டுச்சென்ற இராணுவத் தளங்களை இவ்விரு ஆபிரிக்க நாடுகளும் ஆக்கிரமித்தன. இவ்வாறாக புதிய நெருக்கடிகட்கும் தொடக்கத்திலேயே பொலிசாரியோ முன்னணி முகம் கொடுத்தது.

> **ஐ. நாவின் தோல்விப் பட்டியலில் இப்போது புதிதாக இன்னொரு நாடு சேர்கின்றது. அதன் பெயர் மேற்கு சகாரா (சகராவி அரபு சனநாயகக் குடியரசு).**

இவ்வாறான ஆக்கிரமிப்பிற்கு என்ன காரணம்?பாலை நிலத்திற்கு போட்டி ஏன் என யாரும் வினவக்கூடும். மேற்கு சகாரா பாலை நிலமாக இருந்த போதும் அதன் ஒரு பகுதி மிகப் பெறுமதி வாய்ந்ததாகும். உலகின் மிகச்சிறந்த பொசுபேற்று படிவங்களின் களஞ்சியமாக விளங்குகின்றது. உலகபொஸ்பேற்று உற்பத்தியில் 50விழுக்காடு இங்கேயே பெறப்படுகிறது. அது மட்டுமன்றி இரும்பு, செம்பு, தைத்தேனியம் போன்ற கனிமங்களும் இங்குண்டு. அத்தோடு அத்திலாந்திக் கரையோரம் மிகுந்த மீன் வளமும் கொண்டது, எனவே தான் போலியான காரணங்களை கூறி தமக்கும் மேற்கு சகாராவில் உரிமை இருப்பதாக அயல்நாடுகள் ஆதிக்கம் கொண்டாடின. எனவே பொலிசாரியோ முன்னணி இன்னுமோர் தேசிய விடுதலைப்போரை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. ஸ்பெயின் தனது படைகளை மீளப்பெறத் தொடங்கிய போது பொலிசாரியோ அமைப்பு மேற்கு சகாராவை 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி 27-ம் திகதி சகராவி அரபு சனநாயகக் குடியரசாக அறிவித்து உலக நாடுகளை அங்கீகரிக்குமாறு கோரியது.

ஆனால் மாட்ரிட் உடன்பாட்டை சாட்டாக வைத்து மொரோக்கோவும் மொரித்தானியாவும் மேற்கு சகாராவை முளைவிடும் முன்னரே கிள்ளிவிட முயன்றனர். மொரோக்கோ தனது எல்லைப் பகுதியோடு வளம்மிக்கமேற்கு சகாராப் பகுதியை பெரும் படையெடுப்பை நடத்தி இணைத்துக்கொண்டது. இவ்வாறாக வடக்கு பக்கத்தில் மொரோக்கோ ஆக்கிரமிக்க, தெற்கிலோ மொரித்தானியா படையெடுத்தது. இவ்வாறாக 286,000 கிலோ மீற்றர் பரப்பளவாக நிர்ணயிக்கப்பட்ட சகாரா குடியரசின் மிகப்பெரும்பகுதி இவர்கள் வசமாயிற்று. மொரோக்கோவின் கொடிய தாக்குதல் காரணமாக மேற்கு சகாராவின் மிக முக்கிய நகரங்களான எல் அயுனிலிருந்தும் (ELAYOUN)சமராவிலிருந்தும் மக்கள் மட்டுமின்றி சகாராக் குடியரசின் தலைமையகமும் இடம் பெயர நேரிட்டது. பெருந்தொகை மக்கள் கொடும் பாலைநிலத்தில் அகதிகளாக அலைந்தனர். அருகிலிருந்த அல்ஜீரியாவிற்கு பெரும்பாலானோர் அகதிகளாக சென்றனர். ஆக்கிரமிக்கப்படாத சிறிய பகுதியில் சகராவி குடியரசு இயங்கியது. எனினும் அல்ஜீரியா அப்போது சகராவி மக்கட்கும் பொலிசாரியோவின் இராணுவ பிரிவுக்கும் பெருத்த ஆதரவை வழங்கியது. இதனால் சகராவி மக்கள் முதலில் மொரித்தானியாவுக்கு எதிராக தம் போராட்டத்தை ஆரம்பித்தனர். மொரித்தானியா ஆக்கிரமித்த பகுதிகளினுள் மட்டுமின்றிமொரித்தானியாவிற்குள்ளும் ஊடுருவி பல தாக்குதல்களை மேற்கொண்டனர். இவ்வகையில் 1976 ஜூன் மாதமளவில் மொரித்தானியா சனாதிபதி மாளிகையே தகர்க்கப்பட்டது. தாக்குதலின் தீவிரம் தாங்கமுடியாமல் மொரித்தானிய அரசு ஆட்டம் கண்டது இதனால் மொரித்தானியாவின் அரசிற்குள்ளே குழப்பங்கள்தோன்றி 1979 இல் மொரித்தானிய அதிபரே பதவி கவிழ்க்கப்பட்டு புதிய அரசு அங்கு பதவியேற்றது. புதிய ஆட்சியாளர்பொலிசாரியோவோடு உடன்பாடு ஒன்றிற்கு வந்தனர். இதன்படி தாம் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து மொரித்தானியா வெளியேறியது. அதுமட்டுமன்றி 1979 இல் ஐ. நாவின் பொதுச் சபை சகராவி மக்களின் விடுதலையை அங்கீகரித்தது. இவ்வாறாக ஒரு முனையில் சகராவி மக்கள் பெரு வெற்றி பெற்றனர்.

ஆனால் மொரோக்கோவோ சகராவி மக்களின் வளம் நிறைந்த தாயகத்தை விட்டுச் செல்ல விரும்பவில்லை. உலகத்தின் கண்டனத்தை அது காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. எனவே பொலிசாரியோ தனது போராட்டத்தை மிக்க முனைப்புடன் மேற்கொண்டது தொடர்ச்சியான தாக்குதல்கள். ஊடுருவல்கள் மொரோக்கோவிற்கு பாரிய நெருக்கடி கொடுத்தது. அதிலும் குறிப்பாக பெரும்லாபம் ஈட்டித் தந்த பொசுபேற்று உற்பத்தி பெரு வீழ்ச்சி கண்டது. இத்தகைய நிலையில் மொரோக்கோவின் மன்னர் கசன் தனது மேற்குல ஆதரவாளர்கள் உதவியோடு புதியவழி ஒன்றை கண்டுபிடித்தார். தான் ஆக்கிரமித்த பகுதிகளை தன்வசமாக்க- போராளி ஊடுருவல்களை தடுக்க விசித்திர திட்டமொன்றை வகுத்தார். தாம் ஆக்கிரமித்த மேற்கு சகாராவின் கனிம வளப்பகுதியான டக்லா, எல் அயுன் போன்ற துறைமுகப் பகுதிகளையும் சமரா போன்ற இடங்களைச் சுற்றியும்பெரும் மண் அணைகளை உயர்ந்த மதிலாக அமைக்கத் தொடங்கினார். பல இராட்சத பொறிகளைப் பயன்படுத்தி 1978 தொடக்கம் பல்வேறு கட்டங்களாக 1985ஆம் ஆண்டு வரை இவ்வகையாய் 25ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்திற்கு சராசரி 25 அடி உயரத்திற்கு மதிலொன்று அமைக்கப்பட்டது. மதில்மேல் ஒவ்வொரு 5 கிலோ மீற்றர் தூரத்திற்கும் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் அமைக்கப்பட்ட காவலரண்கள் ஏற்படுத்தப்பட்டன. மதிலருகில் பெருமளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன. பெரும் மின்னியக்க பொறிகள், ஒரு லட்சம் துருப்புகள், போராளிகள் ஊடுருவுவதை தடுக்க கண்காணிக்க பயன்படுத்தப்பட்டனர். இவ்வாறாக மிகப் பாரிய பணச்செலவில் இம்மதில் அமைத்து சகராவி குடியரசின் மையமும் தலைநகரமும் ஆன எல் அயுன் உட்பட பலபகுதிகளை தன்வசம் மொரோக்கோ கொண்டு வந்தது.

இவ்வகையில் மொரோக்கோ செயற்பட பின்னின்று உதவியவர்கள் வேறு யாகுமல்ல. அமெரிக்காவும், பிரான்சும் தான். குறிப்பாக றீகன் பதவியேற்ற பின் மொரோக்கோவிற்கு உதவ வேண்டுமென்றே பென்டகனில் உயர்மட்ட இராணுவக் குழு அமைக்கப்பட்டது. இராணுவ உதவிகள், ஆலோசகர்கள் நவீன மின்னியக்க கருவிகள், ஆயுதங்கள் எல்லாமே மிகத் தாராளமாக வழங்கப்பட்டன. போராளிகள் நடமாட்டம் பற்றியறிய தனது செய்மதிகளின் பயன்பாட்டைக்கூட அமெரிக்கா மொரோக்கோவிற்கு வழங்கியது. இவ்விதமாக முதுகெலும்பு முறியும் நிலையில் இருந்த மொரோக்கோவிற்கு முண்டு கொடுக்கப்பட்டது.

இத்தகைய செயற்பாட்டினால் தற்காலிக தேக்க நிலை ஒன்றை பொலிசாரியோ சந்திக்க நேரிட்டது. அல்ஜீரியாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் காரணமாக அங்கிருந்து கிடைத்த உதவிகள் நின்றன. இவை காரணமாகவும் 1990களில் ஏற்பட்ட சருவதேச அரசியல் மாற்றங்கள் காரணமாகவும் ஐ.நாவின் தலையீட்டால் நன்மை விளையும் என்ற நம்பிக்கையில் பெருமளவு விட்டுக் கொடுப்புகளை பொலிசாரியோ செய்ய முன்வந்தது. 1991இன் நவம்பர் மாதமளவில் ஐ. நாவின் போர் நிறுத்தத்தை ஏற்றது. ஐ.நாவின் கண்காணிப்பில் மக்கள் கருத்தை அறிந்து செயற்பட சருவசன வாக்கெடுப்பிற்கும் இவர்கள் சம்மதித்தனர். அது மட்டுமன்றி வாக்கெடுப்பு நடக்கும் வரை மொரோக்கோவின் 65,000 துருப்புகளும் அவர்களது நிருவாக அமைப்பும் செயற்படவும் அனுமதியளித்தனர். அத்துடன் மொரோக்கோ வற்புறுத்தியதற்கு இணங்க 1975 ஆம் ஆண்டு ஸ்பானியரால் மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வாக்காளர் பட்டியலை தயாரிக்கவும் பொலிசாரியோ ஏற்றது. இது பெரும் விட்டுக் கொடுப்பு. ஏனென்றால் 1975இற்கு பின் அகதி முகாம்களில் இருந்து வாக்களிக்க தகுதியானபெரும் தொகையானோர் இதில் சேர்க்கப்பட்டனர். அதேசமயம் தாங்கொணாத பொருண்மிய சுமைகளை போர்காரணமாக தாங்கி வந்த மொரோக்கோவும் இத்திட்டத்தை ஏற்றது. ஏனென்றால் நாளாந்தம் ஒரு மில்லியன் டொலர் பணம் மேற்கு சகாராவில் செலவழிக்க வேண்டியதோடு மிக மோசமான சூழலில் மொரோக்கோ துருப்புகள் போரிட வேண்டியும் இருந்தது.

ஆனால் தொடக்கத்திலிருந்தே மொரோக்கோ மன்னரின் போக்கு நம்பிக்கையூட்டுவதாக அமையவில்லை. எவ்வாறேனும் வாக்கெடுப்பிற்குமுன் பெருந்தொகை மொரோக்கோ மக்களின் குடியேற்றங்களைஇரகசியமாக ஏற்படுத்தி அவர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் மோசடி வேலையே அவர் திட்டமாகும். இங்குள்ள அவலம் என்னவென்றால் ஐ. நாவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட பாகிஸ்தானைச்சேர்ந்த யாகூப்கான் தொடக்கத்திலேயே பக்கச்சார்பாக நடப்பதாகவே குற்றஞ்சாட்டப்படுகின்றமைதான். 1991 இல் போர் நிறுத்தத்தின் பின் மொரோக்கோ படைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொடுமைகள், வதைகள், காணாமற் போவோர் பற்றிய விபரங்கள் ஆவணமாக்கப்பட்ட போதும் அவை குறித்தும் சகராவி மக்கள் என்கிற போர்வையில் திட்டமிட்டு மொரோக்கோ மக்களை மேற்கு சகாராவில் குடியேற்றும் மன்னர் கசனின் போக்கு குறித்தும் யாகூப்கான் பாராமுகமாகவே இருப்பதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. தொடக்கத்திலிருந்தே யாகூப்கான் போக்கு குறித்து பொலிசாரியோ எதிர்ப்பு காட்டியும் எவ்வித பயனும் கிட்டவில்லை. இதன் காரணமாக தாம் ஏமாற்றப்பட்டதாக சகராவிமக்கள் நினைக்கின்றனர். ஆனால் அருகில் அல்ஜீரியாவில் நடக்கும் இசுலாமிய அடிப்படைவாத போராட்டம் காரணமாக சகராவி மக்களின் சிக்கல் இன்று போதிய கவனத்தை இன்னமும் பெறவில்லை.

இப்போது சருவசன வாக்கெடுப்பு நடாத்த முன்னர் இன்னும் ஒருலட்சம் தனது மக்களை மேற்கு சகாராவின் வாக்காளர் பட்டியலில் சேர்க்க மொரோக்கோ முனைகிறது. இதற்கு கடும் எதிர்ப்பை பொலிசாரியோ தெரிவித்தது. இப்படிப்பட்ட நிலையில் சருவசன வாக்கெடுப்பு என்பது கேலிக்கூத்தாகிவிடும் என்பது மிகத்தெளிவானது. ஆனால் ஐ. நாவோ அல்லது மேற்குலகோ இம் மோசடி பற்றி பெரிதும் கவலைப்படுவதாக தெரியவில்லை. ஏனென்றால் மேற்குலகின் செல்லப்பிள்ளையாக இப் பகுதியில் மொரோக்கோ உள்ளது. கடைசியாக கிடைக்கும் தகவல்களின் படி ஐ. நா செயலரோ ஆபத்தான திட்டம் ஒன்றை முன்வைத்துவிட்டு மேற்கு சகாராவைக்கைவிட்டு வழமைபோல் பின்வாங்க விருப்பதாக தெரிவிக்கின்றது. இவரின் திட்டப்படி விரைவில் ஐ. நா அமைதிப்படையை இப்பகுதியிலிருந்து வெளியேற்றல், சிக்கலை அதே நிலையில் தொடரவிடல் அல்லது ஏதாவது ஒரு தரப்பு விரும்பாத நிலையிலும் சருவசன வாக்கெடுப்பை நடாத்தல் என்பதாகும்.

இப்படியாக மோசடி அம்பலமாகின்றது.மேற்கு சகாரா மக்களின் விருப்பத்தை அறிய வாக்கெடுப்பு இனிமேல் எப்போதாவது நடக்கும் என்றால் அது மொரோக்கோவின் நிபந்தனைகட்கு

(11ஆம் பக்கம் பார்க்க)

பாலகுமாரன்

# டைனொசோர் ஆய்வுக்கும் கடத்தல்காரர் இடையூறு!

**அகழ் பொருள் ஆய்வுக்கு கிடைக்கும் இராட்சத விலங்கினங்களின் தடயங்கள் எலும்புக் கூடுகள் வியாபார ரீதியிலான கடத்தல்களுக்கு நெருங்காது விஞ்ஞானிகளுக்கு கிடைக்குமாயின் இந்த விலங்கினங்கள் குறித்து பல வியப்பான செய்திகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை!**

125 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த இராட்சத மிருகங்கள் தற்பொழுது உயிர் பெற்றுள்ளன ''டைனொ சோர்'' என அழைக்கப்படும் இந்த இராட்சதப் பல்லி இனங்கள் உயிருடன் உலாவத் தொடங்கி விட்டன.

என்ன அதிசயமாகப் பார்க்கிறீர்கள் உங்களின் இதயங்கள் படபடக்கின்றனவா? அஞ்சவேண்டாம். சுமார் 125 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இராட்சத மிருகமான டைனொசோர் பற்றி மிகவும் கிலி கொள்ள வைக்கும் திரைப்படமாகிய 'யூராசிக் பார்க்'' என்ற படத்தில் தான் இந்த மிருகம் புத்துயிர் பெற்று புறப்பட்டு விட்டது.

இத்திரைப்படத்தில் பாரிய பொம்மை டைனொசோர்களை கம்பியூட்டர் மூலம் மீண்டும் உலாவ விட்டிருக்கின்றார் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்ரீபன் ஸ்பில் பேர்க்.

இத்திரைப்படம் தற்சமயம் உலகெங்குமுள்ள திரையரங்குகளில் மிக விமரிசையாக ஓடிக் கொண்டிருக்கின்றது இத்திரைப்படம் மூலம் இவ்விராட்சத மிருகம் பற்றி அறிய பலரின் ஆவலை தூண்டி விட்டிருக்கின்றது.

இதனைத் தொடர்ந்து இம் மிருகம் பற்றிய ஆய்வுகள் அதி தீவிரம அடைந்து வருகின்றன அகழ் பொருள் ஆராய்ச்சி துரிதமடைந்து வருகின்றது இதற்கென பல கோடிக்கணக்கான பணமும் செலவிடப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுகள் குறித்து இனி நோக்குவோம்.

இராட்சதப் பல்லிகளிலேயே மிகவும் பயங்கரமானது டைனொசோர். அக்கால கட்டத்தில் இருந்த இராட்சத விலங்குகளில் இதுவே மிகவும் மோசமானது என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இன்று இதற்கு போட்டியாக இன்னொரு இராட்சத பல்லியை தொல்லுயிரியலாளர் தோண்டி எடுத்துள்ளனர். யூதாவில் என்னும் இடத்தில் இது கிடைத்திருப்பதினால் இதற்கு ''யூதாரேப்டர்'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன் அச்சம் தரும் உருவமும் ஒரு அடி நீளமான கால் நகங்களும் பார்ப்பவர்களுக்கு உயிரையே குடித்து விடும் என்ற அச்சத்தை தோற்றுவிக்கும் போல் உள்ளது.

டைனொசோரின் முன்னங் கால்கள் மிகச்சிறியவை அவை நன்கு வளர்ந்தவை. ஒன்பதுஅங்குலநீள நகங்களும் பின்னங்கால்கள் இரண்டினாலும் பலன்ஸ் செய்து கொண்டு வேகமாக ஓடக் கூடியது இவை கூட்டமாகவே வேட்டையாடி எதிரிகளை கூரிய நகங்களால் கிழித்து சாப்பிடக் கூடியவை என்கின்றனர்.

இந்த இரண்டு போட்டிப் பல்லிகளும் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்துள்ளன. டைனொசோர் 75 மில்லியன் வருடங்களுக்கு முன்னதாகவும், யூதரேப்டர் அதற்கு ஒரு 50 மில்லியன் வருடங்களுக்கு (சுமார் 125 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்) முன்பே வாழ்ந்து மறைந்து விட்டன இவை போன்ற கொலைக் கருவிகள் இன்று எதுவும் இல்லை. இப்படி ஒரு கோரமான உயிரினங்கள் எப்படி பூண்டோடு அழிந்து போயின?

உயிரினங்களை குளிர் இரத்தப்பிராணிகள். வெப்ப இரத்தப் பிராணிகள் என்று இரு வகையாகப் பிரிக்கின்றனர் ஆய்வாளர்கள்.

வெப்ப இரத்தப் பிராணிகள் மனிதரைப்போல எல்லாச் சூழ்நிலைகளிலும் தம் உடல் வெப்பத்தை ஒரே சீராக (97.4 பாரள்ஹீட்) வைத்துக் கொள்ளக் கூடியன.

**பார்த்திபன்**

குளிர் இரத்தப் பிராணிகள் சூழ்நிலைகளின் வெப்பத்திற்கேற்ப உடல் வெப்பத்தை வைத்துக்கொள்கின்றன. அதாவது இரத்தத்தின் வெப்பத்தை மட்டுப்படுத்தும் அல்லது கூட்டக் கூடியவசதிஇல்லாதவை. குளிர்ந்த நீரில் இருக்கும் மீன் நீரின் வெப்பத்திற்கு தன் இரத்தத்தை வைத்துக் கொள்ளும். அதேபோல் பாலைவன சூட்டில் ஓடித்திரிந்து இரைதேடும் ஓணான், சாதாரண பல்லிகள் கொதிக்கும் சூரிய வெப்பத்திற்கு ஏற்ப இரத்தத்தை வைத்துக் கொள்கின்றன.

(8ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசியல் விமர்சனங்களை குறைக்குமாறு பி. பி. ஸிக்கு வற்புறுத்து

இலங்கையின் அரசியல் சூழல் பற்றிய விமர்சனங்களை எந்த அளவிற்கு எமது ஒலிபரப்பில் குறைக்க முடியுமோ அந்தளவிற்கு குறைக்கும்படி நாம் வற்புறுத்தப்பட்டு வருகிறோம். தென்மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலயம் மூலமாக இவ்வகையிலான அழுத்தம் எம்மீது பிரயோகிக்கப்படுகிறது. இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள பி. பி. சியின் சிங்கள சேவையான ''சந்தேசிய'' வைச்சேர்ந்த வசந்தராஜா தெரிவித்தார்.

அவர் வழங்கிய செவ்வியில் மேலும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி நீடிக்க வேண்டும் என்பதையே முதலாளித்துவ நாடுகள் பெரும்பாலும் விரும்புகின்றன. சரியான அணுகு முறையின் மூலம் உண்மை நிலையை படம்பிடித்துக் காட்டுவதன் மூலம் மக்கள் தெளிவு பெற்று வருகின்றனர். இதில் சந்தேசியவும் பங்களிப்புச் செய்வதாகக் கருதப்படுகிறது. தென்பகுதி மக்களுக்கு தற்போது யுத்தம் கசப்பைத் தருகிறது. மக்களிடம் உண்மை நிலையை எடுத்துக் கூறுவதற்குப் பதிலாக அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் அரசியல் வாதிகள் கூடுதல் அக்கறை காட்டுகின்றனர்.

## சந்தேசிய செய்தியாளர் சிறப்பு பேட்டி

சிறிலங்கா ரூபவாகினி கூட்டுத்தாபனத்தினர் என்னிடம் பேட்டி ஒன்றைப் பெற்றுக் கொண்டபோது அவர்கள் விடுதலைப் புலிகளைப் ''பயங்கரவாதிகள்'' என்றே வர்ணித்தனர். ஆனால் நான் அதனை முற்றாக மறுத்து விட்டேன். அவர்கள் ஒரு கெரில்லா அணி என்றும் தமது மக்களின் நலனை பேணுவதற்காகவே அவர்கள் போராடுகின்றார்கள் எனவும் தெளிவாக எடுத்துக் கூறினேன். ஆயுத நடவடிக்கையில் ஈடுபடும் சகலரும் பயங்கரவாதிகள் என்றால் ஆயுதங்களுடன் திரியும் சகல குழுக்களும் மற்றும் இராணுவம், பொலிசாரும் கூட பயங்கரவாதிகள் என நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் மயிலந்தனை. கொக்கட்டிச் சோலை சம்பவங்களுக்கு யார் பொறுப்பு என்று நீதிமன்றம் கூறுகின்றது? எனவும் கேள்வி எழுப்பினேன்.

ஐக்கிய தேசியக் கட்சியையோ சிறிலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது அரசியல்வாதிகளையோ இனப்பிரச்சினைக்கு தீர்வு கொண்டு வருபவார்கள் என நம்புவதை பொருத்தமானதாக நான் கருதவில்லை. தமது நலன்களை முதன்மைப் படுத்திச் செயற்படும் மேற்குலக நாடுகளையோ அல்லது இந்தியாவையோ நம்புவதும் சரியானதாகத் தெரியவில்லை.. மக்களை அரசியல் மயப்படுத்தி மக்களின் மூலம் அரசியல் வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்பதே பயன்தரக் கூடியதாக இருக்கும்.

இங்குள்ளபிரச்சினையும் பாலஸ்தீனபிரச்சினை போன்றதுதான். மக்களுடன் பின்னிப் பிணைந்த ஒரு பிரச்சினையாக இருப்பதனாலேயே இராணுவ நடவடிக்கை மூலம் முறியடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்களை மிரட்டி சிலபகுதிகளை இராணுவகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ள போதும் அப் பகுதிகளிலும் மக்களின் ஒத்துழைப்புடன் எதிர்ப்புநடவடிக்கைகள் இடம்பெறுகின்றன இந்த நடவடிக்கைகள் இராணுவத் தலைமைப் பீடத்தை ஆட்டம் காணச் செய்கிறது.

தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கத்தால் முடியாது இதற்குப் பல காரணங்கள் உண்டு. வாக்குச் சீட்டுகளில் மோசடிகளைச் செய்து அல்லது வன்முறைகளைக்கையாண்டு குழப்பநிலையைத் தோற்றுவித்து வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை இன்று அரசுக்கு இல்லை. தென் மாகாணசபைத் தேர்தலின் போது அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள எத்தனித்தும் தோல்வியையேகண்டுள்ளது. இனவாதத்தை கிளப்புவதன் மூலம் தேர்தலில் வெற்றிபெற அரசாங்கம் எடுத்த முயற்சியும் தோல்வியையே சந்தித்துள்ளது இந்நிலைமை ஐ. தே. க மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். மக்களின் சிந்தனைகள் இன்று வேறுபட்டுவருவதும் உணரப்பட்டுள்ளது.

யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குப் போதுமான நிதியும் கூட இப்போது அரசாங்கத்திற்குப் பெரும் பிரச்சினையாக உள்ளது. மக்களுக்கு நிவாரணம் வழங்குவது, சலுகைகள் அளிப்பது, பொருளாதார அபிவிருத்தி எனப் பல்வேறு

**பேட்டி:- நிமலராஜன்**

நடவடிக்கைகளுக்கும் பெருமளவு நிதி தேவைப்படுகிறது. எனவே யுத்தத்தை அதன் போக்கில் தொடர்ந்து நடத்துவது முடியாத காரியமாகியுள்ளது.

தேர்தலுக்கு முன்பாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படவேண்டும். இந்தப் பிரச்சினையை யுத்தத்தின் மூலம் முடிவுக்கு கொண்டுவர முடியாது. எனவே தான் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னும் கூட இதனை உதாசீனம் செய்யமுடியாது.

எனினும் பேசுவதற்கு இன்னும் குறுகிய காலமே இருக்கிறது தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டிய கடமை இப்போது சிங்கள மக்களிடம் உள்ளது சிங்களமக்கள் தமது கட்சி, சாதிப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு இனப்பிரச்சினை குறித்து புரிந்துகொள்ள வேண்டும். இத்தகையதொரு நிலையிலேயே தமிழ் மக்களும் சிங்கள மக்களை நண்பராக ஏற்றுக் கொள்வர்.

**கடவுளின்**

லாத சூன்ய வெளியில் புகைந்து கொண்டிருக்கிறோம். இந்தப் பூமியை ஒரு பயங்கர இருள் கவ்விக் கொள்வதை நீங்கள் கண்டுகொள்ளவில்லையா? இனிப் பகல் இல்லாதொழிந்துபோகும். மாறி, மாறி, தொடர்ச்சியாக இருள் தான் நிலைத்து விடப்போகிறது. இனிமேல் காலையில்தான் விளக்கேற்ற வேண்டும். கடவுளின் பிணத்தை இப்போது புதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சவக் குழியைத் தோண்டுபவர்களின் சப்தம் உங்களுக்கு கேட்கவில்லையா? கடவுளின் பிணம் அழுகி துர்நாற்றம் எடுக்கிறதே. அந்த வாடை உங்களுக்கு மணக்கவில்லையா? கடவுள் இறந்துவிட்டார். நிச்சயமாக செத்துப்போனார். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவரைக் கொன்றுவிட்டோம். இந்தக் கொலையைப் புரிந்துவிட்டு நாம் எவ்விதம் நிம்மதியாக வாழமுடியும். எல்லாம் வல்ல, புனிதத்தில் புனிதமான அது, எமது கத்திகளுக்குப் பலியாகி செத்துப்போனது. இந்த இரத்தக் கறையை யார் எம்மிடமிருந்து துடைத்தெடுக்கப்போகிறார்கள்? எமது பாவக் கறையை எந்தப் புனித நீரில் நாம் கழுவிக் கொள்வது? எவ்விதமான புனிதச் சடங்குகளை நிகழ்த்தி நாம் இந்தச் சாபக்கேட்டிலிருந்து தப்பிக் கொள்வது?'

அங்கத பாணியில், குறியீட்டு உத்தியில், எதைச் சொல்ல விழைகிறார் நீச்சே.

மேற்குலக மனிதன் கடவுளை இழந்து நிற்கிறான். கடவுளிலிருந்து அந்நியமாகி நிற்கிறான். கடவுட்கோட்பாட்டில் கட்டப்பட்ட கருத்துலகிலிருந்து வேறுபட்டு நிற்கிறான். வளர்ந்துவரும் விஞ்ஞானமும், அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் அவனை ஒரு புதிய யுகத்திற்கு இட்டுச் செல்கிறது இந்தப் புதிய யுகத்தில் அவனது பழைய கனவுகள் மடிந்து போகின்றன. அந்தக் கனவுகளில்ஒன்றான கடவுளும் மடிந்து போகிறார். கடவுளின் மரபில் வந்த அறநெறிகளும் மடிந்து போகின்றன,

கடவுள் இல்லாத உலகில், மனிதனின் இராட்சியம் எப்படி அமையும்? அன்பும், அறமும், கருணையும் அற்ற நீச்சேயின் மகா மனிதர்கள் மனித குலத்தை எந்தப் பாதையில் இட்டுச் செல்வார்கள்?

ஹிட்லர் நீச்சேயின் எழுத்துக்களை மிகவும் விரும்பிப் படித்தார்; பல தடவைகள் திரும்பத் திரும்பப் படித்தார். நீச்சே கண்ட கனவின் திருவுருவமாக, மகா மனிதனாக, தன்னை எண்ணிக்கொண்டார். அந்த மகா மனிதனாக செயலிலும் இறங்கினார்.

ஹிட்லரின் இராட்சியம் எப்படி எழுந்தது? எப்படி வீழ்ந்தது? அந்த வரலாற்றுப் பூகம்பம் எத்தகைய பேரழிவை மனித குலத்திற்கு ஏற்படுத்தியது? என்ற உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் நீச்சே காட்டும் பாதையில், மனித நேயம் செத்துக்கிடக்கும் அந்த இருண்ட பாதையில், காலடி எடுத்து வைக்கமாட்டார்கள்.

# சீதனம்

## சமுதாயத்தைச் சீரழிக்கின்றது!

**ஆதிலட்சுமி சிவகுமார்**

இன்று சமூகத்தைச் சீரழிக்கும் மிகமுக்கிய காரணிகளில் ஒன்றாகச் சீதனம் விளங்குகின்றது. இந்தச் சீதனப் பிரச்சினைக்கு ஆண்கள் காரணமா? அல்லது பெண்கள் காரணமா? என இன்னமும் நாம் வாதிட்டுக் கொண்டிருப்போமேயானால் எமது எதிர்காலச் சந்ததியினருக்குத் தீங்கிழைத்த குற்றவாளிகளவோம். சீதனம் என்ற நடைமுறையானது ஆண்கள், பெண்களை மட்டுமல்ல, சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பாரதூரமாகப் பாதிக்கின்றது. சமூக உறுப்பினர்களிடையே ஐக்கியத்தைக் குலைக்கின்றது. போட்டி பொறாமை உணர்வுகளை வளர்த்து, சண்டை சச்சரவுகளை வளர்க்கின்றது. மனமுறிவுகளை ஏற்படுத்தி பகையாளிகளை உருவாக்குகின்றது.

சீதனம் என்பது குடும்ப வாழ்க்கைக்கு அவசியமா? இல்லையா? என்பதை விட, இது குடும்பங்களை, சமூகத்தைச் சீரழிக்கின்றது. என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். திருமண வயதிலிருக்கும் ஆண்களை, பெண்களை இவர்களைப் பெற்ற பெற்றோர்களை இதன் தாக்கம் உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றது. பெண்ணைப் பெற்றுவிட்டதற்காக பெற்றோர்கள் கலங்குகிறார்கள். பெண்களுடன் கூடிப் பிறந்தமைக்காக ஆண் சகோதரர்கள்கலங்குகிறார்கள். அனைவருக்கும் பாரமாக இருக்கிறோமே எனப் பெண் கலங்குகிறாள். இவ்வாறாக சீதனத்தின் பாதிப்பு நம்மால் உணரப்படுகிறது.

சீதனத்தைச் சாட்டாக வைத்து மனிதன் மனிதனால் சுரண்டப்படுகின்றான். ஒரு குடும்பத் தலைவனின் குருதியும் வியர்வையும், அவனது மகளுக்கு கணவனாக வருபவனால் சீதனம் என்ற பெயரில் உறுஞ்சப்படுகிறதுஇங்கே, இச் சந்தர்ப்பத்தில் ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ தனது தனிமனித உணர்வுகளை தனது விருப்புவெறுப்பு எதிர்பார்ப்புகளைப் புறந்தள்ளிவிட்டு ஜட வாழ்வில் பிணைக்கப்படும் அவலத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது. இதனால் வாழ்க்கையில் பற்றற்ற அல்லது திருப்தியற்ற நிலை உருவாகின்றது. இதனால் குடும்ப அமைதி கெட்டு, குழந்தைகளின் மனநிலை, அவர்களது எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. பெண் ஒடுக்கு முறையின் உச்சக்கட்டமாக சீதன முறை இருப்பதினால் பெண் இங்கே பகடைக் காயாகிறாள் சீதனச் சூதாட்டத்தில் பெற்றோருக்கும் மணமகனுக்கும் நடுவில் பந்தாடப் படுகிறாள் பெண். எனவே தான் இவ்விடயத்தில் பெண்கள் விழிப்புணர்வு பெற்று, இதற்கு எதிர்க்குரல் எழுப்ப வேண்டிய நிலை இருக்கின்றது, இதே போன்று தான் சீதனத்துக்காக ஒரு ஆணின் வாழ்வும் அடகு வைக்கப்படுகின்றது.

சீதனம் என்பது ஆணின் அந்தஸ்தை நிலைநிறுத்தும் அளவுகோலாக அமைகிறது. எனவே அதிக சீதனம் பெறுவதே கௌரவம் என்ற மனோநிலை ஸ்திரப்படுகிறது. இந்தப் போலிக் கௌரவத்திற்காக ஆணின் வாழ்வு அழிகிறது. மணப்பெண்ணிடம் பெருந்தொகையான சீதனத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆண் தன் பேச்சுரிமையை இழக்க வேண்டிய ஆபத்து சூழ்கிறது. கணவன் மனைவியிடையே அன்னியோன்னியம் மறைகிறது. சீறல் சினப்புக்கள் அதிகரிக்கின்றன. சில வேளைகளில் விவாகரத்து வரை இது முன்னேறுகிறது. பிறந்த வீட்டிலிருந்து சீதனத்துடன் செல்லும் பெண் மனதில் ஒருவித ''பெருமை' குடிகொள்கிறது. இப்பெருமை நாளடைவில்உறவுகளிடையே விரிசல்களை ஏற்படுத்துகிறது. இப்படியாக சீதனம் என்கின்ற இந்தச் சுரண்டல் நிகழ்கால- வருங்கால சமூகத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

இன்னொரு வகையில் பார்க்கப்போனால் சோம்பேறிகளையும், தன்னம்பிக்கை இழந்தவர்களையும் சீதனம் உருவாக்குகின்றது. மனைவியானவள் சுமந்து வரும் சீதனத்தில் சுகமாக வாழலாம் என எண்ணுபவன் சோம்பேறியாகமாறுகிறான். இதுவும் திருப்தியற்ற வாழ்வையே அளிக்கின்றது. தொழில்களுக்கு ஏற்றவாறு சீதனம் பெறப்பட்டு வருகின்றமையால் தொழில்களிலே உயர்ந்த தொழில், குறைந்த தொழில் என்ற பேதத்தை சீதனம் ஏற்படுத்துகின்றது. இதனால் பலவேறு விதமான தொழில்களைப் புரிவோரிடையே ஒருவரை ஒருவர் இளக்காரமாக நோக்கும் நிலை உருவாகிறது. இதனால் சமூகத்தின் ஒற்றுமை வலுவிழக்கிறது.

இதனை விட இன்னுமொரு முக்கியமான விடயத்தை நாம் நோக்கவேண்டும் இந்த சீதனம் சமூகத்தில் ஒழுக்கச் சீர்கேட்டை உருவாக்குகின்றது. சீதனமின்மையால் உரியகாலத்தில் திருமணம் நடக்காதபோது பெண் முறை தவறிநடக்கும் ஆபத்தும் எற்படுகிறது. பெண்மட்டுமல்ல ஆணும் முறைதவறுகிறான். இதனால் ஒழுக்கமற்ற சமுதாயம் உருவாகிறது. பெற்றோர் முகமறியாக பிள்ளைகள் மலிகின்றார்கள். இந்த ஒழுக்கக்கேடுகளினால் ''எயிட்ஸ்'' போன்ற மாபெரும் ஆபத்துக்களை எமது சமூகம் எதிர்நோக்கும் ஆபத்து உண்டு. மனநோயாளர்கள் பெருகுகின்றார்கள் பிறந்துவிட்ட பெண்ணுக்கு சொத்து சேர்ப்பதற்காக பெற்றோர் ஓடாகத் தேய்கின்றார்கள்நாற்பது வயதுவரை சீதனமின்றி திருமணம் கைகூடாத பெண் இத்தனை வயதின் பின்னர் திருமணம் செய்யும்போது தாய்மையடையும்தன்மையை பெரும்பாலும் இழந்துவிடுகின்றாள் தனக்கென்று ஒரு வாரிசைப் பெற்றுக்கொள்ள முடியாது ஏக்கத்துடனேயே இவள் ஆயுள் கழிகிறது.

சீதனப் பணம் உழைக்க வேண்டும் என்பதற்காக சகோதரிகளுடன் கூடிப்பிறந்த ஆண்கள் கடத்தல், கொள்ளை, போதைவஸ்து வியாபாரம் என்பவற்றில் ஈடுபடும் சாத்தியம் உண்டு. ஐரோப்பிய, அரபு நாடுகளில் இத்தகைய குற்றங்களுக்காக தமிழ் இளைஞர்கள் தண்டிக்கப்படுவது இதனால் தான். இவை எல்லாவற்றுக்கும் அடிப்படைக்காரணமாகச்சீதனமே விளங்குகின்றது. ஆண் -பெண்ணை ஆத்மார்த்மாக ஓர் அன்புப் பிணைப்பில் இணைக்கும் திருமணத்துக்கு ''வில்லனாக'' விளங்கும் சீதனத்தை சமூகத்திலிருந்து இல்லாதொழிப்போமானால், சமூகம் மிகவிரைவில் முன்னேறும். ஆரோக்கியமான பிணைப்புகள் உருவாகும். பெற்றோர்க்கிடையே ஏற்படும் பிணக்குகளால் உளநலம் பாதிக்கப்படும் பிள்ளைகள் நல்ல பிரஜைகளாவர்.

## தென்தமிழீழ இரவுகள்

அமைதியாய்க் கிடந்தது அன்றைய இரவு
குடிசைகளின் கதவுகள் அடைக்கப்பட்டபடி
ஆனாலும் பதற்றத்தோடு....

நாய்களின் ஊளை இடை நடுவே
தூக்கத்தைக் கலைத்தது
எழுந்து கதவருகே போக,

எட்டத்தில் ஏதோ முனகல்
இடையிடையே உறுமிய வாகனங்களின்
இரைச்சல்....

சப்பாத்துக் கால்களின் சப்தங்களும்
கூடத்தான்....
முத்தாய் வியர்த்தது முகம்

மெல்லெனவே சாத்தப்பட்டது கதவுகள்
நடுக்கப்பில் சாய்ந்தபடியே,
நீண்ட பெருமூச்சுடன் அமர

சப்தங்கள் நெருங்கியது போலவொரு உணர்வு
உணர்வு மட்டுமல்ல உண்மையுந்தான்.
இளைஞனொருவனின் மரண ஓலந்தான்
சாய்ந்திருந்த என்னைத் திடுக்குறச் செய்ய,

ஓலைகளின் ஓட்டைகளினூடு
சற்று நேரத்தில்...
தீச்சுவாலையின் மஞ்சளொளி,

பொட்டுக்கால் பொட்டாய் தென்பட்டது

குரலும் ஓய்ந்தது
மீண்டும்
சப்பாத்துச் சத்தங்களின் இரைச்சல்
வாகனங்களின் உறுமல்

தொலை தூரம் போய்ப்பின் மறைந்தது
விழித்துக் கொண்டது நான்மட்டுமல்ல,

ஏன் அயலவர்களுந்தான்.

எவருமே வாயிற்படியைத் தாண்டாமல்
வாயடைத்து நின்றது தான் உண்மை

நேரங்கள் யுகங்களாய் அன்றைய இரவு
மனதைக் கிளறும்,
நாளை என்னவோ, என்ற ஏக்கம்

''எதுக்கும் விடியட்டும்'' என்ற
சொற்களால் என்னை அமைதிப்படுத்த
அமைதியின்றியே விழிகள் உருண்டன

விடிந்தது காலை
கதவுகள் தாண்டமுன்னே
''கருகிப் போன பிணமாம்''
கதை புரையோடியது
இது எனக்குத் தெரிந்ததுதான்,
இன்று மட்டுந்தானா?
நித்தமும். கதவுகள் திறக்கப்படும்
கழுத்துக்கள் நெரிக்கப்படும்,

யாருக்கு என்றுதான் கேள்வி
ஆனால்,
என்றோ ஒருநாள்
கதவுகள் திறக்கப்படும்
சுதந்திரக் காற்று சுவாசிக்கப்படும்
அதுவரை...

**நா. அன்பரசன்**

## எதிர்காலச் சிற்பிகளுக்காய் ஒருபூங்கா

**தணிகைச்செல்வி**

யாழ்ப்பாணம் கொத்துக் கட்டி - நவாலியில் அமைந்துள்ள சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்கா இன்று தனது முதலாவது ஆண்டு நிறைவு விழாவை கோலாகலமாகக் கொண்டாடுகிறது.

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறை தொடர்வதால் பாதிப்படைந்த - இடம் பெயர்ந்த தமிழ்மக்களின் தொகை எண்ணில் அடங்காது. ஏதிலிகளாக வாழ்கின்ற இம்மக்களின் வாழ்வானது இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும், உணவு, சுகாதாரம், வேலை வாய்ப்பு, பழக்க வழக்கங்கள் என்று பல்வேறு வகைகளிலும் நலிவடைந்து போயுள்ளது.

உடல் பலமும், உள வலிமையும் அற்ற ஒரு சமுதாயம் எம் நாட்டின் நல்ல எதிர்காலத்தில் எத்தகையதொரு பின்னடைவை உண்டுபண்ணும் என்பதை சிந்தித்த தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் எண்ணத்தில் உதித்த திட்டங்களில் ஒன்றுதான் சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காக்கள். எமது தேசம் விடுதலை அடையும்போது எதிர்காலத்தின் அத்திவாரங்களாகவுள்ள இளஞ்சிறார்கள் சிறந்த கல்விமான்களாகவும், பேரறிஞர்களாகவும், வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், விஞ்ஞானிகளாசவும் இன்னும் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்தவர்களாகக் காணப்படுவதுடன் நிறை உடல் ஆரோக்கியம் கொண்ட சிறார்களாக தமிழீழத்தில் துள்ளித் திரிவதையே எமது தலைவர் முக்கிய நோக்காகக் கொண்டுள்ளார்.

01) சிறுவர்களின் உடல்- உள வளர்ச்சிக்கு உதவக் கூடிய போசாக்குள்ள உணவுகளை வழங்குவதும்,
02) இலங்கை அரசின் யுத்த நெருக்கடிகளால் சிறுவர்களின் உடலும் உளமும் பாதிப்புறா வகையில் வளர்த்தலும்,
03) சிறுவர்கள் ஆரம்பக் கல்வியைப்பெறப் பொருத்தமான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்,
04) நல்லொழுக்கம், நற்பழக்க வழக்கம் என்பவற்றைஏற்படுத்துதலும்,

ஆகிய சேவைகளை இத்திட்டம் வழங்குகின்றது. போசாக்குப் பராமரிப்புப் பூங்காவின் சேவையை வேண்டி நின்ற இடம் பெயர்ந்த தீவகமக்கள் தங்கியுள்ள மயூரன் குடியிருப்பில் இப்பூங்கா மிகப் பொருத்தமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் ஐம்பது பிள்ளைகளைப் பராமரித்து வந்த இந் நிலையம் இன்று. நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளுடன் தனது பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எமது தலைவனின் தூர நோக்குப் பார்வையின் அடிப்படையில், சிறுவர்களில்உடல், உள வளர்ச்சியை இலக்காகக் கொண்டு பராமரிப்புப் பணியை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புக்கு, பக்கபலமாக நின்று உழைக்கும் மக்களும் சிறார்களின் உடற்குறைபாடுகளைக் கண்டறிந்து நோய் தீர்க்க உதவும் நடமாடும் சுகாதார சேவைப் பிரிவின் மருத்துவர்களும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியும் பெரிதும் உதவி வருகின்றனர். சிறார்களின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குசூழலிலுள்ள சனசமூக நிலையங்களும் பொது நிறுவனங்களும்எமக்கு ஒத்தாசைபுரிந்துவருகின்றன.

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து கொத்துக்கட்டி மயூரன் குடியிருப்பில் வாழும் மக்கள் தம் சொத்துக்களை, தொழில்களை, கல்விபெறும்

(11ஆம் பக்கம் பார்க்க)

## டைனொசோர்

இப்போதைய கேள்வி டைனொசோர் எனப்படும் இராட்சதப்பல்லி இனம் குளிர் இரத்தப் பிராணிகளா என்பதே. நியாயப்படி உயிரோடு உலாவும் மற்றைய பல்லிகளைப் போல் குளிர் இரத்தப் பிராணிகளாகவே இருக்க வேண்டும். அப்படி இல்லையென்கின்றனர் ரீஸ்பார்ரிக் என்ற தொல்லுயிரியலாளரும் வில்லியம் ஷோவர் என்ற நிலவேதியலாளரும். எனவே எது எப்படி இருப்பினும் இப்பல்லியினம் தொடர்பான ஆராய்ச்சிகளும் கோட்பாடுகளும் வெறும் ஊகங்களாகவே உள்ளன.

ஏனெனில் அந்த உயிரினம் தற்சமயம் புவியில் இருந்து மறைந்து அதன் எச்சங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இவற்றை வைத்து ஊகங்களான முடிவுகளை மட்டுமே எடுக்க முடியும் என்பது திண்ணம். இருந்தும் விஞ்ஞானிகள் விடாப்பிடியாக முயற்சி செய்து ஒரு தீர்க்கமான முடிவுகளைப் பெற முயன்று கொண்டிருக்கின்றனர்.

கிடைக்கின்ற இந்தபல்லியினத்தின் எச்சங்களைக் கொண்டு அதனைவடிவமைத்துக் கொள்ளும் முயற்சிகளிலும் பல தொல்லுயிரியலாளர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

இவ்வாறு செய்யப்பட்ட அதன் உருவங்களை உலகளாவிய ரீதியில் பல நூதன காட்சிச் சாலைகளில் வைத்து பாதுகாத்து வருகின்றனர்.

இதன் மூலம் உலகில் உள்ள மக்களுக்கு வியக்கத்தக்க இப்பல்லியினத்தின் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இதில் வருந்தத்தக்க செய்தி என்ன வென்றால்: இந்த அகழ் பொருள் ஆராய்ச்சியையும் தொல்லுயிரியல் தொடர்பான ஆய்வுகளையும் சீர்குலைப்பதற்கென ஒரு பகுதியினர் முயன்று வருகின்றனர்

இவர்கள் யார் என்றால் கடத்தல் காரர்கள் தான். இவர்கள் அகழ் பொருள் ஆராய்ச்சி மூலம் பெறப்படுகின்ற இராட்சத விலங்கினங்களின் எச்சங்களான எலும்புக்கூடுகள், முட்டைகள், தோல்கள் போன்றவற்றை வெளி நாடுகளுக்கு கடத்தி பெருந்தொகையான பணம் சம்பாதித்து வருகின்றனர்.

இதனால் இத்தகைய இராட்சத பல்லிகள் போன்றவற்றின்ஆராய்ச்சிகள்நின்று விடும் அபாயம் தோன்றியுள்ளது.

அகழ் பொருள் ஆய்வில் அகப்படுகின்ற இராட்சதப் பல்லிகளின் எலும்புக்கூடுகள் ஐந்து கோடி டாலருக்கு விற்பனையாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன்வெளிநாட்டுஆராய்ச்சியாளர்களுக்கும் இவை கடத்தல் மூலம் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விஞ்ஞானிகளல்லாதோரும் இந்த அகழ் பொருள் ஆய்வில் ஈடுபட்டு கிடைக்கின்ற எலும்புக் கூடுகளை விற்பனை செய்து வருகின்றனர்.

அமெரிக்காவில் ''ஸ்டேற் லான்ட் போறஸ்டி'' எனும் வன பரிபாலன இலாகாவிற்குச் சொந்தமான இடத்தில் அகப்பட்ட டைனொசோர் எலும்புக்கூடு ஒன்று 1438 சிறு உதிரிப்பாகங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் 14-95 டாலருக்கு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இந்த எலும்புத் தொகுதிகளுடன் தொடர்பு கொள்ளுதல் ஆபத்தானது எனவும் சட்டத்துறை வல்லுநர் றிச்சாட் மியூலர் தெரிவிக்கின்றார்.

'மென்ரான'' சர்வகலாசாலையை சேர்ந்த டாக்டர் பற்றிக் வெய் தெரிவிப்பதாவது மொன்ரான என்னும் இடத்தில் அகழ் பொருள் ஆய்வில் ஈடுபட்டு டைனொசோர் எலும்புக்கூடு கிடைத்த பொழுது துப்பாக்கி முனையில் அவை அபகரிக்கப்பட்டது என தெரிவித்தார்.

போதைப் பொருள் கிராக்கியைப் போலவும் இந்த டைனொசோர் தடயங்கள் ஏற்பட்டு விட்டன. மேலும் அகழ் பொருள் ஆய்வில் பெறப்படும் டைனொசோர் எலும்புக்கூடுகள் அனைத்தும் விற்பதோ வாங்குவதோ சட்டரீதியான தொழிலாகும். இந்த விற்பனை சகல இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் டைனொசோரின் பாரிய எலும்புக் கூடு ஒன்றை ஜப்பானிய வங்கி ஒன்று ஐந்து கோடி டாலருக்கு கொள்வனவு செய்திருப்பதாக வதந்தி ஒன்று உலவுகின்றது என டாக்டர் ஸ்பென்யெர் தெரிவிக்கின்றார். இதன் முட்டை ஒன்று லண்டனில் 76,000 டாலருக்கு விற்பனையாகின்றது.

சாதாரண தாவரங்களை மட்டும் உண்ணும் டைனொசோர் ஒன்றின் எலும்புக்கூடு 300,000 முதல் 400,000 டாலருக்கு விற்பனையாகின்றது.

யப்பான்,ஜேர்மனிபோன்ற நாடுகள் இந்த எலும்புக் கூடுகளில் அதிக கவனம் செலுத்துகின்றன. விற்பனைக்காகதனியார் டைனொசோர் எலும்புக் கூடுகளை கடத்திச் சேகரிப்பதனால் விஞ்ஞான ஆய்வுகள் தடைப்பட்டுக் கொண்டே செல்கின்றன

வையோமிஸ் என்னும் இடத்தில்இராட்சதப் பறவை இனம் ஒன்றின் எலும்புக் கூடு கண்டெடுக்கப் பட்டு இத்தாலியில் தனியார் ஒருவருக்கு விற்பனையாகியதால் விஞ்ஞானிகள் அது குறித்த ஆய்வுகளையும் தகவல்களையும் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

எனவே அகழ் பொருள் ஆய்வுக்கு கிடைக்கும் இராட்சத விலங்கினங்களின் தடயங்கள் எலும்புக் கூடுகள் வியாபார ரீதியிலான கடத்தல்களுக்கு நெருங்காது விஞ்ஞானிகளுக்கு கிடைக்குமாயின் இத்தகைய விலங்குகள் குறித்த பல வியப்பான செய்திகள் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

---

பலருடைய வேண்டுகோளின்படி 'வரதர்' எழுதும் பாரதக் கதையின் 'முன்கதைச் சுருக்கம்' இந்த இதழில் வெளிவந்துள்ளது.

**புதினம்** 1-7-94 விற்பனையாகிறது

(8692)

---

### யா,கோண்டாவில்
### இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்

பாடசாலை அபிவிருத்திநிதிக்காக பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள். (29.6.94)

1-ம் பரிசு — 12004, 2-ம் பரிசு — 3112,
3-ம் பரிசு — 3403,

ஆறுதல்பரிசில்கள்
இல. (1) 220, (2) 2044, (3) 3355, (4) 3091, (5) 12546,

மேற்கூறப்பட்ட பரிசுச் சீட்டுடன் எதிர்வரும் 04.07.94 திங்கட்கிழமை பரிசில்களை பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பழைய மாணவர் சங்கம்
(8691) யா. கோ. இ. கி. ம. வி.

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலியும் 22-வது அகவையும்



**வீரவேங்கை வினோ**
**(பூரண வேலுப்பிள்ளை தனராஜ்)**
தனிப்பனை குடியேற்றம், வல்வெட்டித்துறை

பிறப்பு: 3-7-1972 — வீரச்சாவு: 1-07-1991

(ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் வீரச்சாவடைந்தார்.)

மண்ணின் மடியில் உறங்கிக் கொண்டிருக்கும்மாவீரரே! நீங்கள் மறைந்தாலும் உங்கள்இலட்சியம் மறைவதில்லை! இதோ இளையவர்கள் உங்கள் இலட்சியப்பாதையில் பாதம்பதித்து உங்கள் கனவை நனவாக்க விரைந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் கனவு நனவாகும்! சுதந்திர தமிழீழம் - மலரும்

A. G. A. லேன்
வல்வெட்டித்துறை (8615) ஐயா, அம்மா. சகோதரர்கள்.

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 1977.08.26



அஸ்தமனம் 1993.07.01

**செல்வகிருஷ்ணன் சசீஸ்காந்**
(சதீஸ்)
(உடுத்துறை தெற்கு, தாளையடி)

எங்கள் சுமைகளைப் பகிர்ந்து கொள்ள
உன் தோள்களுக்காய் பார்த்து நின்றோம்
ஆனால் இன்று
எங்கள் தோள்களுடன்
இதயத்தையும் கனக்க வைத்துவிட்டது.
உனது அஸ்தமனம்

உன் ஆத்மசாந்திக்கு
இறைவனை வேண்டிநிற்கும்
அப்பா, அம்மா, சகோதர சகோதரி
உற்றார், உறவினர், நண்பர்கள்.
(8695)

---

### கேள்விப்பத்திர அறிவித்தல்
### சுகாதார திணைக்களம்
### யாழ்ப்பாணம்.
## பொருட்கள் வழங்கல்

எனது பிராந்தியத்தில் உள்ள சுகாதார நிறுவனங்களிற்கு தேவையான தளபாடங்கள், வைத்திய உபகரணங்கள், வாகன பற்றறிகள், வாளி, மண்வெட்டி, குப்பைவாரி போன்ற ஏனைய உபகரணங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் என்னால் 07.07.94ம் திகதி நண்பகல் 12.00மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். வேண்டிய விபரங்களையும் உரிய விண்ணப்பப் படிவத்தையும் எனது பணிமனையில் பணிமனை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி கேள்விப்பத்திரங்கள் தங்களால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரையிடப்படல் வேண்டும். அத்துடன் அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் ''யாழ் சுகாதார திணைக்களத்திற்கான பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' என்று குறிப்பிடல் வேண்டும். இப்பத்திரம் என்னால் 07.07.94ம் திகதி பிற் கல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரம திறக்கப்படும் போது கேள்விப் பத்திரம் சமர்ப்பித்தவர் சமுகமளிக்கலாம். அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை சமுகமளிக்க ஏற்பாடு செய்யலாம். இப் பொருட்கள் மிகவும் அவசரமாகத் தேவைப்படுவதால், ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விதாரர் நாம் கேட்கும் பொருட்களை ஒரு மாதத்திற்குள் விநியோகிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

**வைத்தியகலாநிதி கே. எஸ். சிவகுரு,**
பதில் சுகாதார சேவைகள்
மாகாண பிரதிப் பணிப்பாளர்,

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (சி/9705)

---


## போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள்பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்
★ போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல் (சாம்பிள் பார்வையிடலாம்)
★ கொம்யூட்டர் றபர்சில் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
★ லயின், காவ் ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
★ புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## (-) கொழும்பு கலைக்கூடம் (-)

55, லெப். இளங்கோ வீதி,
யாழ்ப்பாணம்.
தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்
(சி-9873)

# வடக்கு - கிழக்கில் தேர்தல் மூலம் ஜனாதிபதி டி. பி. அடைய முனைவது என்ன?

வடக்கு-கிழக்கின் இன்றைய இராணுவ அரசியற் சூழ்நிலை எவற்றையும் கருத்திற் கொள்ளாமல் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தேர்தலை நடத்தி முடித்து விடுவது என்பதில் முனைப்பாகச் செயற்படுவதாகத் தெரிகின்றது. இதற்கென அவர் கைக்கொள்ளப் போகும் வழிமுறையும் பெரும்பாலும் தற்பொழுது ஊர்ஜிதப்படுத்தப்பட்டும் விட்டது.

டி. பி. விஜேதுங்காவின் திட்டத்தின் பிரகாரம் வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தலை நடத்துவதே அவரது நோக்கமாகும். இதற்கென யாழ் தேர்தல் மாவட்டத்திற்கு அமைக்க வேண்டிய 400 தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை ஒன்றிணைப்பது என்பது முடிவாகும். இதன் பிரகாரம் தீவுப் பகுதியிலும், மற்றும் வலி. வடக்கில் உள்ள சில இடங்களிலும் சில வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்படலாம்.

இதேசமயம் வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்து வவுனியா நகரப் பகுதி உள்ளடங்கலாக செட்டிகுளம் அரசாங்க அதிபர் பிரிவிலும், மற்றும் மன்னார்த் தீவுப் பகுதியிலும் சில வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதன் மூலம் தேர்தலை நடத்தி முடித்துவிடலாம் என டி. பி. விஜேதுங்கா கருதுகின்றார்.

கிழக்கைப் பொறுத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில், அதிலும் குறிப்பாக சிங்கள வாக்காளர் அதிகமுள்ள பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் தேர்தல் நடத்துவதே அரசின் திட்டமாகும்.

## அரசியல் யாப்பிற்கு முரணா?

இவ்வாறான டி. பி. விஜேதுங்காவின் திட்டமானது அரசியல் அமைப்பிற்கு உட்பட்டதா? அன்றி முரண்பாடானதா? என்பவை குறித்து தற்பொழுது பல வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. இவ் விடயத்தில்அதாவது வாக்களிப்பு நிலையங்களை ஒருங்கிணைத்தல் என்ற டி. பியின் திட்டத்திற்கு எதிராக பிரதான எதிரணியான பொது ஜனஐக்கியமுன்னணியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நீதிமன்றம் வரையில் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், டி. பி யின் இந்நடவடிக்கைக்கு அரசியல் அமைப்பில் இடம் உண்டு என்று அரசாங்கத் தரப்பினரும் அதேசமயம்இவ்விவகாரத்தில் அரசியல் அமைப்பிலேயே முரண்பாடு உண்டு என்று அரசியல் யாப்பு விவகாரத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் அரசியல் அமைப்பு தொடர்பான விவகாரத்திற்கு உயர் நீதிமன்றமே தீர்ப்புச்சொல்ல வேண்டும். ஆனால் டி.பி. விஜேதுங்கா நடத்தும் தேர்தலானது ஜனநாயக ரீதியிலான பொதுவான தேர்தல் வழிமுறைக்கு உட்பட்டதாக அமையாது என்பதை மட்டும் சாதாரணமாகவே எவரும் கூறிவிட முடியும்.

ஏனெனில் யாழ் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்து 1994ஆம் ஆண்டில் 5,96,413 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில்சுமார் 7000-8000 இடைப்பட்டவாக்காளர்கள் மட்டுமே வாழ்கின்றனர். இந்நிலையில் வாக்களிப்பு நிலையங்களை இணைப்பதற்கு அரசியல் யாப்பில் சரத்துத் தேடுவது வீணானதொன்றே, ஏனெனில் பெருமளவு பகுதியில் வாக்காளர்களே இல்லாதபோது வாக்களிப்பு நிலையங்களின் தேவை என்ன? வழமையான வாக்களிப்பு நிலையங்கள் போதாதா? வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான தேவை ஏன் வந்தது? இவையே இன்று பலர் முன்னுள்ள கேள்வியாகும்.

இந்த வகையில் டி.பி. விஜேதுங்கா நடத்தப் போகும் பெரும்பான்மையினர் கருத்தறிவதான தேர்தலில் பெரும்பான்மை மக்கள் வாக்களிக்கப் போவதில்லை. வாக்களிப்பவர்களும் நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலும், தமது வாக்குகள் களவாடப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினாலுமேவாக்களிக்க வேண்டியதொரு நிலை உள்ளது என்பதே உண்மையாகும்.

ஆனால், இவ்வாறானதொரு நிலையே உள்ளது என்பது டி. பி. விஜேதுங்காவிற்குத்தெரியாத தொன்றல்ல. இதுஉலகம் அறிந்த விடயம் இந்நிலையிலும் டி. பி. விஜேதுங்கா, இத்தேர்தல் குறித்து ஏன் இத்தனை கரிசனையுடன், செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் என்பதே இன்றுபலரதுமுன்னுள்ளவினவாகும்

டி. பி. விஜேதுங்காவும், ஐ. தே. கட்சியினரும் இது குறித்து அரசியல் அமைப்பின் பிரகாரம் நடந்து கொள்வதாக விளக்கம் கூற முற்படலாம். ஆனால், அது அத்துணை ஏற்றுக்கொள்ள முடியாததொன்று, ஏனெனில் வடக்கு-கிழக்கு மாகாணத்தை தவிர்த்து பாராளுமன்றத்தேர்தலை நடாத்தி புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியும் என்றே அரசியலமைப்பு விபரம் அறிந்த வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## டி. பி. எதிர்பார்ப்பது என்ன?

அவ்வாறானால் வடக்கு - கிழக்கு தேர்தலின் மூலம் டி. பி. விஜேதுங்கா தனக்கும், ஐ தே. கட்சிக்கும் அனுகூலமான எதிர்பார்க்கைகள் சிலவற்றைக் கொண்டிருக்கிறார் என்பதே உண்மையாகும். இதற்கு ஆதாரமான பலமான காரணிகளும் உண்டு என்பதும் சுட்டிக் காட்டக் கூடியதாகவும் உள்ளது.

இன்றைய தென்னிலங்கை அரசியல் நிலைவரத்தின்படி ஐ. தே. கட்சியானது 30 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளையே பெறும் வாய்ப்புக்கள் இருப்பதாக சில அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இவ் அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பீடு சரியானால், இது 1956 ஆம் ஆண்டு தேர்தலில் ஐ. தே. கட்சி அடைந்த தோல்வியின் பின்னர் அடையப் போகும் மிகப் பெரும் தோல்வியாக இது அமையும் எனக் கணிப்பிடப்படுகின்றது, எதிர் தரப்பினரும்எஸ். டப்ளியூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா காலத்தில் வீசியது போன்றதொரு அலை தமது பக்கம் வீசுவதாகவே தெரிவிக்கின்றனர். ஐ. தே. கவில் கூட பலர் இதை எதிர்பார்ப்பதாகவே தெரிகிறது.

1956 ஆம் ஆண்டு. 27. 44 சதவீதமான வாக்குகளைப் பெற்று ஐ. தே. கட்சி எட்டு பாராளுமன்ற ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியது. ஆனால் 1970ம் ஆண்டிலும் இதேமாதிரி ஒரு தோல்வியையே ஐ. தே கட்சி சந்தித்ததாயினும் அது பெற்ற வாக்கு வீதமானது சுதந்திரக்கட்சியை விட சுமார் ஒரு வீதம் அளவில் உயர்வாகவே இருந்தது. அதாவது சுதந்திரக்கட்சி 36. 63 வீதத்தைப் பெற்றுக் கொள்ள 37.92 வீதத்தை ஐ. தே. க பெற்றுக் கொண்டது, இதேசமயம் சு. கட்சி 90 ஆசனங்களைப் பெற 17 ஆசனங்களை மட்டுமே ஐ. தே. க. பெற்றது.

இம்முறை அரசியல் அவதானிகளின் கணிப்பின் படி ஐ. தே. க பொதுஜன ஐக்கிய முன்னணியை விட குறைந்தளவு வாக்குப்பெற்று தோல்வி அடையுமாயினும், கடந்த காலத்தைப் போன்று பாராளுமன்றத்தில் எட்டு ஆசனம், பதினேழு ஆசனம் என்றமோசமானநிலை அடையும் என்பதற்கில்லைஎன்று துணிந்து பதில் கூறமுடியும்- ஏனெனில், விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையில் அவ்வாறான தோல்விகள் இவ்விருகட்சிகள் எவைக்கும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறவேண்டும் அதிலும் ஐ. தே. க விற்கு அந்நிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகும். ஏனெனில், விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவம் ஐ. தே. கவுக்கென்றே உருவாக்கப்பட்டதொன்றாகும்.

இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டாக இவ்வருட ஆரம்பத்தில் - மார்ச்சில்- இடம் பெற்ற தென் மாகாண சபைத்தேர்தல் முடிவுகளையேசுட்டிக் காட்ட முடியும். தென்மாகாணத்தில் உள்ள 21 தேர்தல் தொகுதிகளில் 20 தொகுதிகளில் பொதுஜன ஐக்கிய முன்னணி அமோகவெற்றி ஈட்டியது, அதேசமயம் ஐ. தே. க. ஒரு தொகுதியில் மட்டும், அதுவும் மிகவும் குறைந்தளவு வாக்குகளால் வெற்றியீட்டியது. இருப்பினும் தென் மாகாண சபையில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு 30 இடங்கள் கிடைக்க ஐ தே. கட்சிக்கு 23இடங்கள் கிடைக்கப் பெற்றன. அதாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் கட்சிக்கான மொத்த வாக்குகள் கணிப்பிடப்படுவதால், இனிமேல் 1956, 1970, 1977 ஆம் ஆண்டு தோல்விகளைப் போன்ற தோல்விகளை பிரதானகட்சிகள் இனி அடைவதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே உள்ளன எனலாம்.

இதே சமயம் கடந்த காலத் தேர்தல்களில், 1965 - யூலை தேர்தலுக்குப் பிறகு நடந்த தேர்தல்களை ஒப்பிட்டு நோக்கினால், ஐ. தே. க தோல்வியிலும், வெற்றியிலும் 35 வீதத்திற்கும், கூடுதலான வாக்குகளைப் பெற்றே வந்துள்ளது. இதிலும் சில சமயம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் தொகை குறைவாக இருந்த போதும், வாக்குகளின் எண்ணிக்கை சிறிலங்கா சுதந்திரக் கட்சியைவிட அதிகமாக இருந்தமையும் சுட்டிக் காட்டக் கூடியதாகும்.

இந்த வகையில், எதிர்வரும் தேர்தலில் ஐ. தே. க தோல்விஅடையினும் விகிதாசாரப் பிரதிநிதித்துவதின் பிரகாரம் பாராளுமன்ற ஆசனங்களில் கணிசமான இடத்தைப் பெறும் என்று துணிந்து கூறலாம், இதன் இடைவெளியானது, அநேகமாக 30 ஆசனங்களுக்கு மேற்பட்டதாக இருக்கும் என்றே அரசியல் அவதானிகள் மட்டத்தில் பலமானகருத்து நிலவுகின்றது.

இதன் அடிப்படையில் தான் தற்பொழுது வடக்கு-கிழக்கில் தேர்தலை நடத்த டி. பி. விஜேதுங்கா தீர்மானித்துள்ளதையும், அதில் தீவிரமாக ஈடுபாடுகாட்டுவதையும் நோக்கவேண்டும். இதனைச் சுருக்கமாகக்கூறுவதானால் வடக்கு-கிழக்கு தேர்தல் மூலம் தெற்கில் ஏற்படும் தோல்வியை ஈடுகட்டுவதே டி. பி. விஜேதுங்காவின் நோக்கம் எனக் கொள்ளலாம்.

## வடக்கு - கிழக்கும் தேர்தலும்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 35 பாராளுமன்ற ஆசனங்கள் உள்ளன. இதில் 5 ஆசனங்கள் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுபவையாகும். இந்நிலையில், தேர்தல் மூலம் 30 ஆசனங்களுக்கான தெரிவுகள் இடம் பெறவுள்ளன. கடந்த காலத் தேர்தலில் இப்பிராந்தியத்தில் இருந்து சிங்களக் கட்சிகள் பொதுவாக ஐந்து அல்லது ஆறு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன. மிகுதி ஆசனங்களில் பெரும்பாலானவை தமிழ் கட்சிகளிடமும், மிகுதி முஸ்லிம் கட்சியிடம் அல்லது முஸ்லிம்களிடம் இருந்துள்ளன.

இந்நிலையில், தற்பொழுது வடக்கு - கிழக்கில் அரசியல், இராணுவச்சூழ்நிலையைத் தனக்குச்சாதகமாகப் பயன்படுத்தி தேர்தலின் மூலம் வடக்கு - கிழக்கில் உள்ள பாராளுமன்ற ஆசனங்களை தான் பெற்றுக் கொள்வதோ, அன்றி தனது ஆதரவாளர்களைப் பெறவைப்பதன் மூலம் பாராளுமன்றத்தில் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

ஐ. தே. க அரசாங்கத்தைப் பொறுத்து இது சாத்தியமாகக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. யாழ். தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்து வாக்களிப்பு நிலையங்கள் இணைக்கப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் தேர்தலில் யார் போட்டி இடுவதென்பது இன்று கேள்வியாகவே உள்ளது.

வாக்களிக்க மக்கள் இல்லை, நியாய பூர்வமான தேர்தல் நடைபெறுமா? என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, ஐ. தே.க சார்ந்தவர்களோ, அன்றி ஐ. தே. க அரசாங்கத்துடன் கூட நிற்கும் ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்களைத் தவிர வேறு யார் போட்டியிட முடியும்? தேர்தல் குறித்து பிரசாரம் செய்ய முடியும்?

இது தனியாக பொதுஜன ஐக்கிய முன்னணியை மட்டுமல்ல, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களையே பாதிக்கக் கூடியதாகும் ஏனெனில் பல தமிழ்க்குழுக்கள் கூட இதில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் அரிதாகவே உள்ளன.

எடுத்துக்காட்டாக, தமிழர் விடுதலைக்கூட்டணி ஐ. தே க அரசுடன் கடந்த காலத்தில் ஒட்டுறவாக இருப்பினும். அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போட்டியிட வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. இதற்கு அரசாங்கம் ஓரளவு அனுமதித்தாலும். இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள ஆயுதம் தரித்த தமிழ்குழுக்கள் அங்கீகரிக்குமாஎன்பது தான் முக்கிய பிரச்சினையாகும்.

இதேசமயம் தமிழ் ஆயுதக்குழுக்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறான பிரதேசத்திலேயே நிலை கொண்டிருப்பதால் ஒருபகுதியில் உள்ள தமிழ் ஆயுதக்குழு மற்றப் பகுதியில் உள்ள ஆயுதக்குழு தமது பிரதேசத்தில் போட்டியிடுவதை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. ஏற்கனவே தமக்குள் முரண்பட்டுள்ள இக்குழுக்கள் இவ்விடயத்தில் எவ்வாறு ஒற்றுமையாக ஒன்றாக நிற்கமுடியும்? தமக்கு கிடைக்கும் அரிய வாய்ப்பை அவை ஒருபோதும் கைவிடத் தயாராக இருக்கப் போவதும் இல்லை.

இதேசமயம் கடந்த கால தமிழ் கட்சிகளின் அரசியல் வரலாற்றை அவதானித்துப் பார்ப்பின் எத்தகைய துரோகம் இழைத்திருப்பினும் அவை அனேகமாக ஐ. தே. கவையே ஆதரித்து வந்துள்ளன அதிலும் இன்று இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தமிழ் குழுக்களின் போசகர்களாக ஐ. தே. கவே உள்ளது. இந்நிலையில் இவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் - மோசடியுடன் கூடியதாக இருப்பினும் - ஐ. தே கவிற்கு எதிராக ஒருபோதும் செயற்படப்போவதில்லை. செயற்படவும் முடியாது ஏனெனில் ஐ. தே. க. ஆட்சி நிலைக்கும்வரையே இவர்களின் ஆதிக்கமும் நிலைக்க கூடியது. இந்நிலையில் இவர்கள் ஐ. தே. க விற்கு ஆதரவு வழங்காது விடுதல் என்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

இந்நிலையை நன்றாகப் பயன்படுத்தி தனதுதேர்தல் வெற்றியை ஊர்ஜிதப்படுத்துவதே டி. பி. யின் திட்டமெனக் கொள்ளலாம். இதன் பிரகாரம் ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள தமிழ் குழுக்களுடன் ஒத்துழைப்பது, அல்லது இராணுவத்தின் ஒத்துழைப்புடன் தமிழ் குழுக்களையும் ஓரம் கட்டிவிட்டு தமது சார்பானவர்களை தேர்தலில் போட்டியிட வைத்து வெற்றியடையவைப்பது. இதில் முதலாவது அணுகுமுறையை வடக்கிலும் இரண்டாவதைகிழக்கிலும்அவர் மேற்கொள்ளலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான தேர்தல் அணுகுமுறையை கடைப்பிடிக்கும் பட்சத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஐ. தே.கவினால் ஈடுகட்டிவிட முடியும் என்ற டி.பி.விஜேதுங்காவின் எதிர்பார்ப்பு சாத்தியப்படமுடியாதது என்று புறக்கணித்து விடக் கூடியது அல்ல.


ஜெயராஜ்

# THE MOVIE OF THE CENTURY

# அன்று தரையில் நடந்தவை - இன்று
# யாழ். ஸ்ரீதர் திரையில்!

பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் பார்க்கத் துடிக்கிறார்கள்.

நீங்களும் இரண்டு மணிநேரம் JURASSIC PARK இல் உலாவர வாருங்கள்.



அரங்கு நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

STEVEN SPIELBERG

இயக்கத்தில்

# JURASSIC PARK

மாணவர்கள் பாடசாலையூடாக தொடர்பு கொண்டால் காட்சி நேர,
கட்டண சலுகைகள்உண்டு.

(வி-9710)

## எதிர்காலச்

வசதியை இழந்ததால் தமது பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்தையே இழந்துவிடுவோமோ என ஏங்கிநின்றனர். தமிழீழத்து இளைய சமுதாயத்தின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள எமதுஇயக்கமானதுவிடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் மூலம் இப் பூங்காவை அங்கே கட்டி எழுப்பியது.

பத்துப் பரப்புக் காணியில் அமைந்துள்ள இப் பூங்காவானது சிறுவர் பூங்கா, சிறுவர் உறங்கும் இடம், வகுப்புஅறைகள், கலந்துரையாடல் மண்டபம், கிணறு, மலசலகூடம், காரியாலயம், சமையலறை முதலுதவியறை, களஞ்சியம் ஆகியவற்றினை தன்னகத்தே கொண்டு உள்ளது. இப் பூங்காவானது நிர்வாகி, ஆசிரியைகள், பராமரிப்பாளர், சமையலாளர், காவலாளி ஆகியோரைக் கொண்டுநன்கு திட்டமிட்ட முறையில் இயங்கிவருகின்றது.

எம்மால் உருவாக்கப்பட்ட சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவுக்கு மருதடி விநாயகர் திருப்பணிச்சபை, மில்க்வைற் நிறுவனம், அண்ணாகோப்பி நிலையம்- இணுவில், வேலக்கைப்பிள்ளையார் கோவில் -நவாலி, தம்பாட்டி கடற்றொழிலாளர் அபிவிருத்தி அமைப்பு- நவாலி, அந்திரான் முருகமூர்த்தி கோவில் - நவாலி, கழையோடை அம்மன் கோவில், முருகமூர்த்தி சனசமூக நிலைய நிர்வாகிகள். நவாலி வடக்கு சனசமூகநிலையம், வளர்மதி மாதர்சங்கத்தினர், அடைக்கல நாயகி ஆலயப் பங்குத்தந்தை- ஆனைக்கோட்டை ஆகியோர் உதவி நல்கியுள்ளனர்.

இப்பூங்காவானது மேன்மேலும் சிறப்புற்று விளங்க வேண்டுமென போசாக்குப் பராமரிப்புப் பூங்காவின் ஆசிரியர்களும், இடம் பெயர்ந்த தீவக மக்களும் வாழ்த்துகின்றனர்.

இந்தச் சிறுவர் பராமரிப்புப் போசாக்குப் பூங்கா தனது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்நேரத்தில் எமக்கு ஆதரவு அளித்த, அளித்து வருகின்ற எல்லா நிறுவனங்களுக்கும், அமைப்புக்களுக்கும், அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதில் பூரிப்படைகின்றோம். இவர்கள் தொடர்ந்தும் எமக்கு உறுதுணையாக நிற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பிஞ்சுகளின் எதிர்காலம் சிறக்கும் வண்ணம் நாமும் வாழ்த்துகின்றோம்.

---

## எரித்திரியா

தவிர்க்க முடியாததாகியது.

எரித்திரிய போராட்ட வரலாற்றில் போராட்டக் குழுக்களுக்கிடையேயிருந்த உட்பூசல்களால் 1970 ஆம் ஆண்டில் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி தோன்றியது.

போராட்ட இயக்கங்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட்ட போதிலும் எரித்திரிய நாடு சுதந்திரமடைய வேண்டும் என்ற இலட்சியத்தில் எரித்திரியர்களிடத்தில் எந்த வித வேறுபாடும் இருக்கவில்லை.

எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியில்போராளிகளாகச் சேர்வதற்காக ஏராளமான ஆண்களும் பெண்களும் கூடுதலாக கிராமப் புறங்களிலிருந்து தமது வீடுகளை விட்டு வெளியேறினர் பல சண்டைகளின் போது சோவியத் யூனியனால் வழங்கப்பட்ட ஏராளமான நவீன ஆயுதங்களை எரித்திரிய போராளிகள் கைப்பற்றினர்.

இவையாவும் ஈழப்போரை ஒத்தாகவே உள்ளது.

எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியானது தன்னிலும் பார்க்க மிகப் பெரிய, நவீன ஆயுத வசதிகளைக் கொண்ட படையைத் தோற்கடித்திருக்கிறது. அது எரித்திரிய மக்களின் பங்களிப்பையும், போராளிகளின் ஈடுபாட்டையும் தியாகத்தையும் காட்டுகின்றது.

இது கூட ஈழவிடுதலை போராட்டத்துடன் ஒப்பிட்டு நோக்கத் தக்கதாக உள்ளது.

இதே காலத்தில் - (1990) எதியோப்பிய இயக்கங்கள் தங்களது தீவிர ஆயுதப் போராட்டத்தை எதியோப்பிய படைகளுக்கு எதிராக நடத்தின கூடுதலான எண்ணிக்கையுடைய அவர்களுக்கு வெளிநாடுகள் பாரியளவில் உதவியளித்ததால் அரசாங்கத் துருப்புக்கள் தோல்வியைத் தழுவின.

1991 ஆரம்பத்தில் இரு நாடுகளின் இயக்கங்களினால் (எரித்திரியா-எத்தோப்பியா) ஒரே சமயத்தில் நடத்தப்பட்ட தாக்குதலினால் எஞ்சிய இடங்களிலுமிருந்து எதியோப்பிய படை வெளியேறியது

1991 மே மாதம் எரித்திரியா சுதந்திர நாடாகியது

உறுதியான நோக்குடன் நடாத்தப்பட்ட போராட்டம் வெற்றி பெற்றுள்ளது

இந்தப் போராட்டத்தில் 25 வீதத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பங்கு வகித்துள்ளனர். இராணுவத்திலும் அரசியலிலும் பெண்கள் தலைமை தாங்கும் நிலைக்கு உயர்ந்துள்ளனர்.

1991 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் நாள் நிறுவப்பட்ட தற்காலிக எரித்திரிய அரசாங்கம் எரித்திரியாவின் சுதந்திரத்தை தீர்மானிப்பதற்காக 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பொதுசன வாக்கெடுப்பு நடாத்தியது

இந்த வாக்கெடுப்பை கண்காணிப்பதற்காக பல குழுக்கள் 500க்கு மேற்பட்டவர்களைநிறுத்தியது. அவர்கள் இந்தப் பொதுசன வாக்கெடுப்பு சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற்றதாக தங்கள் ஒருமித்த முடிவைத் தெரிவித்தனர்.

எத்தனையோ இழப்புகள், தியாகங்களுக்குப் பின்னர் எரித்திரியா வ்டுதலை பெற்றுள்ளது.

தற்போதைய சுதந்திர அரசினால் எரித்திரிய தேசம் புனர் நிர்மாணம் செய்யப்படுகின்றது.

அடக்கப்பட்ட- ஒடுக்கப்பட்ட எரித்திரிய மக்கள் சுதந்திரக் காற்றை உள்ளிழுக்கின்றனர்.

இதனுடன் இப்போராட்டத்தைப் பற்றிய விரிவான தகவல்களோடு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மண்ணிற்கு இந்த நூல் பெரும் பயன்பாடாக வழிகாட்டியாக இருக்கும். என நம்பலாம்.

வெல்ல முடியாத போராட்டம் என்று சிலரால் கேலி செய்யப்பட்ட எரித்திரிய போராட்டம் ஏகப்பட்ட ரத்தம் சிந்துதலுக்குப் பின்னர் வெற்றியடைந்துள்ளது.

எரித்திரியமக்களும் போராளிகளும், குழந்தைகளும் சந்தோஷ உந்துதலில் துள்ளிக் குதிக்கின்றனர்.

எரித்திரிய போராளிகள், பொது மக்கள் ஆகியோரின் வெவ்வேறு வடிவங்கள் அடங்கிய புகைப்படங்களை சுமந்து வெளி வந்துள்ளது.

இது - எமது தேசத்தின் தேவை வீரத்தையும் விடுதலையையும் உச்சரிக்கும். இது போன்ற நூல்கள் இன்னும் வெளி வ:ர வேண்டும்.

எரித்திரியாவிற்கு அடுத்ததாக ஈழம் தன் பெயரை உலக வரைபடத்தில் பொறித்துக் கொள்ளும் என்ற உணர்வை இந்த நூல் ஏற்படுத்துகின்றது.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-7-1
### வெள்ளி இரவு

8. 01 - கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி ''கரும்புலிகள் களமாடும் தேசம் இது''

8. 20- எழுச்சி கீதங்கள்

8. 30 -செய்திகள்

8.40- அரசியல் அரங்கம் ''கிழக்குத் திமோரை உலகம் மறந்துவிடுமா?''

8.50- வாத்திய கானங்கள்

### 1994-7-2
### சனி காலை

7.02-மாவீரவணக்கம்

7.15-நீங்கள் கேட்டவை

7. 30- செய்திகள்

7.35பத்திரிகைச் செய்திகள்

7. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

---

## துப்பாக்கிச்சூடு இளைஞர் படுகாயம்

காரைநகர் கடற்பரப்பில் அடைந்து வந்துகொண்டிருந்த கட்டுமரம் ஒன்றை மீட்கச் சென்றவர்கள்மீது காரைநகர் கரையில் இருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஒருவர் படுகாயமடைந்தார்.

சுழிபுரம் சவுக்கடி கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. கணபதிப் பிள்ளை மகேந்திரன் (வயது 22, என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சி) (41)

## கலந்துரையாடல்

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு வழமையான இடத்தில் நடைபெறும்

## மண்டபங்கள் மாற்றம்

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற இருந்த சங்கீத நடன, சித்திரக்கலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சைநிலைய மண்டபங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன

சங்கீத ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலையிலும், நடன ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை யாழ். கன்னியர்மடம் ம.வி. மண்டபம் 1 இலும், சித்திரக்கலை ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை யாழ். கன்னியர்மடம் ம.வி. மண்டபம் 2 இலும் நடைபெறவுள்ளதாகயாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (பா)

---

## சகராவி மக்களை

அமைய அவர்கட்கு சாதகமாகவே அமையும் விதத்தில் நடக்கப்போகின்றது என்பதே அது. எனவே ஐ. நாவை பெரும் அமைப்பாக நம்பி உலக அபிப்பிராயத்தை மதிப்பதாக நினைத்து விட்டுக் கொடுப்புகள் செய்த சகராவி மக்கள் இனி என்ன செய்யப்போகின்றார்கள் என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டியது. எனவே இப்போது ஐ.நா தலையிட்டு கடைசியில் கைவிட்ட நாடுகளின் வரிசையில் இன்னோர் நாடு சேர்கின்றது. அண்மைக் காலமாக ஐ. நாவின் கதை இப்படித்தான் போகின்றது; இது கற்பனை கதையல்ல; உண்மைக்கதை.

---

# கரும்புலிகள் நாள் -1994 கலைப்போட்டி முடிவுகள்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் கரும்புலிகள் நாளையொட்டி நடாத்திய யாழ். மாவட்ட மட்டத்திலான அரங்க விழாவுக்கும், கிராமிய ஆடற் கலைக்குமான போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. போட்டி முடிவுகள் வருமாறு:-

### கும்மி:-

**கீழ்ப்பிரிவு:-**

1-ம் இடம் - இ. சிவராஜினி உரும்பிராய் கிழக்கு.
2-ம் இடம் - செஞ்சோலை மகளிர் ஆரம்ப பாடசாலை.
3-ம் இடம் - கணபதிபாலர்பாடசாலைவியாபாரிமூலை.

**மேற்பிரிவு:-**

1-ம் இடம் - திலகா நர்த்தனாலயம் சாவகச்சேரி.
2-ம் இடம் - ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
3-ம் இடம் - யா / திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கொடிகாமம்.

**அதிமேற்பிரிவு:-**

1-ம் இடம் - நடிகமணி நாடக கலா மன்றம், நவாலி.

### கோலாட்டம்:-

**கீழ்ப்பிரிவு:-**

1-ம் இடம் - ஞானாசிரியர் பாடசாலை, கரவெட்டி.
2-ம் இடம் - செஞ்சோலை மகளிர்ஆரம்பப்பாடசாலை. நல்லூர்.
3-ம் இடம் - மெதடிஸ்த த க. பாடசாலை, வதிரி, நெல்லியடி.

**மேற்பிரிவு:-**

1-ம் இடம் - சிவகலைக்குழு, உரும்பிராய் கிழக்கு.
2-ம் இடம் - ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், யாழ்ப்பாணம்.
3-ம் இடம் - திலகா நர்த்தனாலயம், சாவகச்சேரி.

### கரகம்:-

**கீழ்ப்பிரிவு:-**

1-ம் இடம் - இ. சிறிதர்ஷினி, உரும்பிராய்.
2-ம் இடம் - செஞ்சோலை மகளிர்ஆரம்பப்பாடசாலை.
3-ம் இடம் - கப்பூது ஏகாம்பர வித்தியாலயம்

**மேற்பிரிவு:-**

1-ம் இடம் - ஜனசக்தி சனசமூக நிலையம், கரணவாய் கிழக்கு.
2-ம் இடம் - பொலிகண்டி இ. த. க. பாடசாலை.
3-ம் இடம் - சிந்து முகாம், உடுவில்.

**அதிமேற்பிரிவு:**

1-ம் இடம் - வேவி வேலுப்பிள்ளை.
2 ம் இடம் - மந்துவில் இளைஞர் மன்றம்.

### காவடி:-

**கீழ்ப்பிரிவு:-**

1-ம் இடம் - இ. ஸ்ரீதர்ஷினி
2-ம் இடம் - பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாலயம்.
3-ம் இடம் - செஞ்சோலை மகளிர்ஆரம்பப்பாடசாலை.

**மேற்பிரிவு:-**

1-ம் இடம் - நாட்டிய கலாலயம். மீசாலை.
1-ம் இடம் - சிவகலைக்குழு, உரும்பிராய்.
3-ம் இடம் - திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி.

**அதிமேற் பிரிவு:**

1-ம் இடம் - வேவி வேலுப்பிள்ளை, நீராவியடி
2-ம் இடம் - மந்துவில் இளைஞர் மன்றம்.

### பாரம்பரிய அரங்கு

1-ம் இடம் - ''பாதையின் படிக்கற்களாய்'' பாசையூர் இளம்கலைஞர் மன்றம்.
1-ம் இடம் - ''மரணத்தை வென்றவர்கள்'' நீர்வேலி வடக்கு,
3-ம் இடம் - ''விடியலுக்காய் விரைந்தவர்கள்'' தீவகம் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்,
சிறந்த நடிகர் - (விவசாயி) தம்பையா (மரணத்தை வென்றவர்கள்) சி. தனபாலசிங்கம்,
சிறந்த நடிகை - ஈழநந்தினி (ஈழநந்தினி) வைரமுத்து வேலாயுதம்,
சிறந்த எழுத்துரு - ''பாதையின் படிக்கற்களாய்''
சிறந்த நெறியாள்கை - ''பாதையின் படிக்கற்களாய்''
சிறந்த இசை - ''மரணத்தை வென்றவர்கள்''
சிறந்த வேடப்புனைவு - ''விடிவதற்காய் விரைந்தவர்கள்''

### சிறுவர் அரங்கு

**கீழ்ப் பிரிவு:**

1-ம் இடம் - யாழ்/கைதடி நாவற்குழி மகா விஷ்ணு வித்தியாலயம்,
2-ம் இடம் - ஞானாசிரியர் கல்லூரி, கரவெட்டி,
3-ம் இடம் - மெதடிஸ்த த- க- பாடசாலை ,வதிரி-

**மேற்பிரிவு:**

1-ம் இடம் - இ. கமலநாதன் குழு, நாவற்குழி,
2-ம் இடம் - யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
3-ம் இடம் - மெதடிஸ்த தமிழ்கலவன்பாடசாலை வதிரி

### நவீன அரங்கு

1-ம் இடம் - ''சூரியனைச் சுட்டெரிப்போம்'' சுதேசிய கலாமன்றம், உதயதாரகை கலாமன்றம் இணைந்து உருவாக்கியது.
2-ம் இடம் - ''தூரம் அதிகம் இல்லை'' ஆ. இளங்கோ குழுவினர் வடமராட்சி கலைஞர் வட்டம், வடமராட்சி-
3-ம் இடம் - ''பாசமுடிவு'' புத்தூர் நவயுக நாடக மன்றம்-
சிறந்த நடிகர் - ஊமை ''பாசமுடிவு'' பொன்னன்- முருகேசு-
சிறந்த நடிகை - சாந்தி 'தூரம் அதிகமில்லை' ந. கிருஸ்ண வேணி-
சிறந்த எழுத்தாளர் - சூரியனை சுட்டெரிப்போம்-
சிறந்த நெறியாள்கை - ,, ,,
சிறந்த இசை - தூரம் அதிகமில்லை
சிறந்த வேடப்புனைவு - சூரியனை சுட்டெரிப்போம்.

# டென்மார்க் தீவொன்றில் 90 தமிழர் கரையொதுங்கினர்

டென்மார்க் தீவான பாமகாவில் 90 இலங்கைத் தமிழ் அகதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கப்பலொன்றில் வந்து இத் தீவில் கரையிறங்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

தாங்கள் எவ்விதம் அங்கு வந்துசேர்ந்தார்கள் என்பது பற்றி எதுவும் கூற இவர்கள் மறுத்து விட்டனர் என்றும் பொலிசார் கூறுகின்றனர். இந்த இலங்கைத் தமிழ் அகதிகள் கஸர்பை சூனுக்கு வெளியேயுள்ள அகதி முகாம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

தாங்கள் டென் மார்க்கில் புகலிடம் கோர விருப்பதாக இத் தமிழர்கள் தெரிவித்தார்கள் என பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். ஐந்து எஸ்லோமிய மாலுமிகள் இவர்களை டென்மார்க்கின் கிழக்குப் பகுதியில் உள்ள பாம்கோங் தீவிற்கு கடத்தி வந்தார்கள் என சந்தேகிக்கப்படுகிறது.

## உதைபந்தாட்ட போட்டி

திருமலை நட்சத்திரங்கள் வி. கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டங்களாக மாலை 2 மணிக்கு ஆரம்பமாகும். முதலாவது போட்டியில் கொக்குவில் பொற்பதி வி. கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் வி. கழகமும் 3 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது போட்டியில் பாசையூர் சென் அன்ரனீஸ் வி. கழகத்தை எதிர்த்து மானிப்பாய் சில்வஸ்ரர் வி. கழகமும் 4மணிக்கு ஆரம்பமாகும் மூன்றாவது போட்டியில் வதிரி டைமன்ஸ் வி. கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை யங்றோயல் வி. கழகமும் விளையாடவுள்ளன. போட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

## பாராட்டுவைபவம்

யாழ். கலட்டி மெதடிஸ்ற் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த இருபத்தைந்து வருடங்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் சேவை புரிந்து வருகின்ற திரு. ச. திருநாவுக்காசு அவர்களின் சேவையைப் பாராட்டு முகமாக பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஒன்றிணைந்து சேவை நலன் பாராட்டு வைபவம் ஒன்றை இன்று ஒழுங்கு செய்துள்ளனர்.


யாழ். ஸ்ரீதரில்
STEVENSPIELBERG
இயக்கிய
JURASSIC PARK
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
தினசரி 4, 6
சனி, ஞாயிறு 10.30, 4,6 மணி
(சி-9872)


## கலந்துரையாடல்

வலிகாமக் கோட்டத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்திலும், பி. ப. 3.00 மணிக்கு தென்மராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் வடமராட்சிக் கோட்டத்திற்குட்பட்டவிளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதால் அனைத்து விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது.

## மாவிலைகுறைப்பு

இன்று தொடக்கம் கோதுமை மாவின் விலை ஒரு ரூபா ஐம்பது சதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. இது குறித்து உணவு ஆணையாளர் திரு. எம். பி. வியானராய்ச்சி வானொலிச் செய்தி மூலம் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## இன்னிசை கானங்கள்

நாளை சனி இரவு வட்டு இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் தமிழீழத்தின் புகழ் பெற்ற இசைக் கலைஞர்களும், பாடகர்களும் இணைந்து வழங்கும் இன்னிசை கானங்கள் நிகழ்ச்சி இடம் பெறும்.

## கரும்புலிகள் எழுச்சி குடியிருப்பு திறப்புவிழா

கரும்புலிகள் எழுச்சிக் குடியிருப் பொன்று அல்வாய் மேற்கு கட்டைப்புளியடி திக்கத்தில் இன்று மாலை 4. 30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது கரும்புலிகள் அறிவாலயம், கரும்புலிகள் பாடசாலை, கரும்புலிகள் இல்லம் என்பன இதில் திறந்து வைக்கப்படும்.

இரவு 7. 30 மணிக்கு பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## நிர்வாக

நடைபெறாமையால் 26 வயதிற்குள் மாணவர்களால் பட்டம்பெறமுடியாதிருந்தது. குறிப்பாக யாழ். பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பெருந்தொகையான பட்டதாரிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே முன்னர் இருந்தது போல் வயதெல்லையை 32 ஆக மாற்றும்படி அம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## மூவர்

விடுவிக்கப்பட்டு நேற்று மாலை 4.50 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்நதனர்.

சின்னத்தம்பி - சிவசுப்பிரமணியம் (65), செபேஸ்ரி பர்ணாந்து (70), செபேஸ்ரி அந்தோனி (63) ஆகியோரே விடுவிக்கப்பட்டு வந்தவர்களாவர். (நி) (யோ)

## நால்வர்

சுற்றி வளைப்பின் போது நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் நடத்திய இச் சுற்றி வளைப்பில் மூன்று பெண்களும், ஒரு ஆணும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

## தமிழ்

அப்படியென்றால் மக்களின் இலட்சியத்துக்கும், புலிகளின் இலட்சியத்துக்கும் வேறுபாட்டைக்காண முடியவில்லை என்று அர்த்தமா என்று ஜோர்ச் ஆர்னி கேட்டதற்கு,

விடுதலைப் புலிகள் எப்போதுமே மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பி வருகின்றனர். எனவே நாங்கள் அதனுடன் இனங்காணுவதாக இருக்கலாம். ஆனால் உண்மையில் மக்களுக்காகத் தான் என பதில் தந்தார்.

கத்தோலிக்க மதபீடம் நடுநிலையானது எனக் கூறினீர்கள் ஆனால் நீங்கள் கூறும் முறையைப் பார்க்கும் போது நீங்கள் உண்மையில் புலிகளின் பக்கம் போல் தெரிகிறதே என மீண்டும் ஜோர்ஜ் ஆர்னி கூறியபோது,

நாங்கள் புலிகள் பக்கமோ, அல்லது வேறு எவர் பக்கமோ இல்லை துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் அடக்கப்பட்டிருக்கும், உரிமைகள் மறுக்கப்பட்ட நீண்டகாலம் அரசியல் ரீதியில் ஒதுக்கப்பட்ட மக்கள் பக்கந்தான் நாங்கள் இருக்கிறோம் எனப் பதிலளித்தார் ஆயர்.

## திருமலை

- ★ மழைக் கவசம் - 01
- ★ ரைபிள் கிறனைற் - 02
- ★ தண்ணீர் கான் கோல்சர் - 01

என்பன கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## பொலிஸ்காவல்நிலை எரிந்து நாசம்

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா காவல் நிலையம் ஒன்று தீப்பற்றி எரிந்ததாகவும் பல ஆயுத தளபாடங்கள் நாசமானதாகவும் தெரியவருகின்றது.

கடந்த ஞாயிறு இரவு ஹொரவப்பொத்தான வீதியிலுள்ள பொலிஸ் நிலையத்தின் காவல் நிலையமே மேற்படி எரிந்தது. இதற்கு காரணம் மின்சார ஒழுக்கு என தெரிவிக்கப்பட்ட போதும் உண்மையான காரணம் எது எனத் தெரியவரவில்லை.


## மரடோனா விளையாட தடை

ஆர்ஜன்ரீனா உதைபந்தாட்டக் குழு தலைவர் மரடோனா உலக உதைபந்தாட்ட போட்டியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். 'எவற்றீன்' எனப்படும் தடை செய்யப்பட்ட ஆஸ்மாவுக்கான மருந்து பாவித்துள்ளார் என நிரூபிக்கப்பட்டு இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## செயலாளர்

றார். நடராஜா நீக்கப்பட்டதனால் காலியான உப தலைவர் பதவிக்கு மத்திய மாகாண சபை உறுப்பினரும் இ. தொ. கா. தலவாக்கலை மாநில பொறுப்பாளருமான எஸ் ஏ. கந்தசாமி நியமனம் செய்யப்பட்டுள்ளார்

## வீரச்சாவு



மேஜர் தவக்குமார் (எழில்நிலவன்)



லெப். பார்த்தீபன்

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன் தினம் விமானப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த மேஜர் தவக்குமார் எழில் நிலவன் (நாகராஜா தர்மராஜ் திருகோணமலை), லெப்டினன்ட் பார்த்தீபன் (கணபதிப்பிள்ளை கிருபரட்ணம், திருகோணமலை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## முகாம் இடமாற்றம்

மட்டக்களப்பு பகுதியிலுள்ள பாரிய இராணுவ முகாமொன்று இடமாற்றப்பட்டுள்ளது. செங்கலடியிலுள்ள சித்தாண்டி இராணுவ முகாமே மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரிகளின் ஆலோசனையின்படி இடமாற்றப்பட்டுள்ளது.


பெண்களுக்கான
வேலைவாய்ப்பு

தமிழீழப் பெண்கள் தொடர்பான சமூக ஆய்வினை மேற்கொண்டு வரும் நிறுவனம் ஒன்றில் பணிபுரிய பெண்கள் தேவை.

வயதெல்லை:- 19 தொடக்கம் 30 வரை
தகைமை :- ஆகக் குறைந்த தகைமையாக க. பொ. த. உயர் தரத்தில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புள்ளி விபரம் திரட்டுதலில் தேர்ச்சி பெற்றிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். விபரங்கள் நேரில்.
விண்ணப்ப முடிவுத் திகதி:- 12 - 07 - 1994
தொடர்பு :- வி. இ. 338 மே/பா ஈழநாதம் பணிமனை, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(சி 9709)



BASIC ENGLISH
BY WELL EXPERIENCED TEACHER
ON MONDAYS, WEDNESDAYS & FRIDAYS
4-00 — 5 00
Fees Rs. 75/- per month
COMMENCEMENT: 04 -- 07 -- 1994
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd CROSS STREET,
JAFFNA.
(சி-9712)


## மரண அறிவித்தல்

### அன்னலட்சுமி சின்னத்தம்பி

சின்னத்தம்பி இராசம்மாவின் அன்பு மகள் செல்வி அன்னலட்சுமி 29-6-94 அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசம்மாவின் அன்பு மகளும் தங்கம்மா, பாலசுந்தரம், செல்லம்மா, விசாலாட்சி, அரியரட்ணம் (கனடா), காலஞ்சென்ற மார்க்கண்டு, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும் தில்லைநாதன், காலஞ்சென்ற சிவகுரு, இராமலிங்கம், சந்திரவதனி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-06-94இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. குமாரசாமி

(8693)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.